பக்கங்கள்-16 | 07.ஆவணி.2022 | விலை–40.00

பாபு தையல் இயந்திரம்
திருத்துமிடம்

0776906182

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

கலையரசி
நகைமாடம்

புதுக்குடியிருப்புச் சந்தி,
புதுக்குடியிருப்பு.
T.P- 0774357193

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –380

## ரணிலின் ராஜதந்திர அரசியல் வேட்டைக்கு இறையாகிப்போன மஹிந்த, கோட்டா குடும்ப அரசியல்!



## சர்வ கட்சி அரசு தமிழ் அரசியலுக்கு சாத்தியமா?

## இலங்கை சூழலை பொருளாதார ஒத்துழைப்பால் ஆக்கிரமிக்க முயல்கின்றதா இந்தியா?

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# ரணிலின் ராஜதந்திர வேட்டைக்கு இறையாகிப்போன மஹிந்த கோட்டா குடும்ப அரசியல்!

கடந்த பொதுத் தேர்தலில் வரலாறு காணாத வீழ்ச்சியை பதிவு செய்த ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து ஒரே ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தை வைத்துக் கொண்டு நாடாளுமன்றத்திற்கு பிரவேசித்த ரணில் விக்ரமசிங்கவினால் என்ன மாற்றத்தை ஏற்படுத்தி விட முடியும் என எண்ணிய பலருக்கு இன்றைய ரணிலின் அவதாரம் பிரம்மிக்க வைக்கலாம்.



225 பேர் சூழ்ந்திருந்த அவையில் தனியொருவருவராக இருந்து இன்றைய இலங்கை அரசியலில் கிங் மேக்கராக திகழ்கின்றார்.

**தேர்தலில் தோற்ற ரணிலுக்கு.... அடித்த அதிர்ஷ்டம்..!! ராசியா காய் நகர்த்தலா?**

1970 களில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக தனது அரசியல் பயணத்தினை ஆரம்பித்தார் ரணில். 1977ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலின் ஊடாக நாடாளுமன்றத்திற்கு பிரவேசித்தார். அதனைத் தொடர்ந்து 1980ஆம் ஆண்டு கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்று ஒன்பது ஆண்டுகளாக பதவி வகித்த நிலையில் 1993ஆம் ஆண்டு முதன்முறையாக இலங்கையின் பிரதமர் ஆசனத்தில் அமர்ந்தார். அதன் பின்னர் 1994ஆம் ஆண்டு அவர் ஐக்கியத் தேசியக் கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றார். இன்று வரை அந்தப் பதவியில் தொடர்ந்து கொண்டும் உள்ளார். பின்னரான காலப்பகுதியில், 1999ஆம் ஆண்டு நடைபெற்ற இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியைத் தழுவிக் கொண்டார். அப்போது ஆட்சியில் இருந்த சந்திரிக்கா தலைமையிலான ஆட்சி கலைக்கப்பட்டபோது 2001ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்தலில் ரணில் தலைமையில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியது. மீண்டும் ஒருமுறை ரணில் விக்ரமசிங்க பிரதமரானார். எனினும், அவரது பதவிக் காலம் முடியும் முன்னதாகவே அப்போதைய ஜனாதிபதி சந்திரிக்கா அம்மையாரின் நடவடிக்கையால் ரணில் தலைமையிலான அரசாங்கம் கலைக்கப்பட்டது. அதன் பின்னர் நடத்தப்பட்ட தேர்தலிலும் ரணில் தோல்வியையே தழுவிக் கொண்டார். மீண்டும் 2005ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலிலும், ரணில் விக்ரமசிங்க தோல்வியைத் தழுவிக் கொண்டதுடன், ராஜபக்ச குடும்பத்தாரின் குடும்ப எழுச்சிக்கு பிள்ளையார் சுழி போட்டதும் அந்தத் தேர்தலே.

2005ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ச வெற்றி வாகை சூடிக் கொண்டதுடன் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பை கையேற்றார். இவ்வாறு தொடர் தோல்விகளைச் சந்தித்த ரணில் விக்ரமசிங்கவுக்கு அடுத்ததும் பெறும் தோல்வியாகவே அமைந்தது. மூன்று தசாப்த காலங்களாக இலங்கையில் இடம்பெற்ற உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த மகிந்த ராஜபக்ச தலைமையிலான அந்த அரசு யுத்த வெற்றியை பிரதானமாகக் கொண்டு 2010ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலிலும் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பறிக் கொண்டது. எனினும், ரணில் விக்ரமசிங்க தலைமையில் இறுதிப்போரை வழிநடத்திய இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஜனாதிபதி தேர்தலில் களமிறக்கப்பட்டு தோல்வியைக் கண்டதுடன், ஜனாதிபதி தேர்தல் வரலாற்றில் முதல் முறையாக ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளர் களமிறங்கவில்லை என்பதுடன், யானை சின்னத்துக்கு பதிலாக அன்னப்பறவை சின்னமே முன்னிலைப்படுத்தப்பட்டது. இடையில் கண்ட பல தோல்விகள் ரணிலின் அடுத்த அரசியல் நகர்வுக்கு மிகப்பெரிய பலமாகவே இருந்தது எனலாம். பல விட்டுக் கொடுப்புக்களைச் செய்ய வேண்டிய நிலை ரணிலுக்கு ஏற்பட்டாலும், நிதானித்து காய் நகர்த்தல்களை மேற்கொண்ட ரணில் விக்ரமசிங்க அந்த 2015ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவை களமிறக்கினார். இது, ராஜபக்சவின் அரசியல் வரலாற்றில் ஒரு சிறிய சறுக்கலை ஏற்படுத்தியதுடன் ரணிலுக்கு மிகப்பெரிய வெற்றி வாய்ப்பாக அமைந்தது.

அந்த தேர்தலில் மைத்திரிபால சிறிசேன வெற்றியீட்டியதுடன், மீண்டும் பிரதமர் பதவிக்குத் தேர்வானார், அதனைத் தொடர்ந்து அதே ஆண்டு நடத்தப்பட்ட பொதுத் தேர்தலிலும் மிகப்பெரிய வரலாற்று வெற்றியைப் பதிவு செய்தார் ரணில். பதவிக்கு வந்தவுடன் அதிரடியான பல மாற்றங்களை ரணில் விக்ரமசிங்க ஏற்படுத்தியிருந்தார். அதில் ஒன்று அரசியலமைப்பு சீர்த்திருத்தம். 18ஆவது சீர்த்திருத்தத்தில் இருந்த ஒருவர் எத்தனை முறை வேண்டும் என்றாலும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடலாம் என்ற நிலை 19ஆவது அரசியலமைப்பின் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

எனினும், ரணிலின் நிர்வாகத்திற்கும், மைத்திரியின் ஆளுமைக்கும் இடையில் ஒத்துவராததனால் என்னவோ இருவருக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் அதிகரித்து கொண்டே இருந்தன. இதன் விளைவு யாரும் எதிர்பாராத நேரத்தில் மகிந்த ராஜபக்சவை பிரதமராக அறிவித்தார் மைத்திரி... திடீரென ஏற்பட்ட இந்த அரசியல் மாற்றம் இலங்கையை ஸ்தம்பிதம் அடையச் செய்தது எனலாம். இது ரணிலின் பயணத்தில் ஏற்பட்ட மற்றுமொரு அடி. அதன் பின்னரான நீதிமன்ற நகர்வுகளையடுத்து, எதிர்க்கட்சிகளின் ஆதரவுடன் மீண்டும் ரணில் விக்ரமசிங்க பிரதமராக பதவியேற்றார்.

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 16 ஆம் திகதி நடைபெற்ற இலங்கையின் 8 ஆவது ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதில் பிரதமர் ரணில் விக்ரமசிங்க குறியாகவே இருந்தார். எனினும், கட்சிக்குள் எதிர்ப்புகள் வலுத்ததாலும், பங்காளிகள் விடாப்பிடியாக நின்றதாலும், நாட்டு மக்கள் சஜித்தை கோரியதாலும் மூன்றாவது முறையும் தியாகம் செய்ய வேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டார். 2019ஆம் ஆண்டு நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடைந்ததோடு, கட்சி இரண்டாக பிளவடைந்து சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி உயதமானது. அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற பொதுத்தேர்தலில் இரு அணிகளும் தனித்தனியாகவே போட்டியிட்டன. இதில் ஐக்கிய மக்கள் சக்தி 54 ஆசனங்களைக் கைப்பற்றியது. ஐக்கிய தேசியக் கட்சி மிகப்பெரிய வரலாற்றுத் தோல்விகளைத் தழுவிக் கொண்டது. தேர்தலின் மூலம் ஒரு ஆசனத்தைக் கூட பெற முடியாத துரதிஷ்ட நிலைக்கு கட்சித் தள்ளப்பட்டது. ஐக்கிய தேசியக்கட்சி படுதோல்வியை சந்தித்து நாடு முழுவதும் 2.15% வாக்குகளையே பெற்றது. அத்துடன், தேசியப்பட்டியல் ஊடாக ஒரு வாய்ப்பு கிடைத்தது. நாடாளுமன்ற அரசியலுக்கு வந்த பிறகு ரணில் எந்தவொரு பொதுத்தேர்தலிலும் தோற்றதில்லை. 42 வருடங்களாக தொடர்ச்சியாக நாடாளுமன்ற உறுப்பினராக பதவி வகித்து சாதனையும் படைத்துள்ளார்.

எனினும், கடந்த பொதுத் தேர்தலில் மக்கள் ஆதரவை இழந்த ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தேசியப்பட்டியல் ஊடாக மீண்டும் நாடாளுமன்றத்திற்குள் பிரவேசித்தார். பாரிய அரசியல் அனுபவம் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க பிரதமர் பதவி வகித்த போதிலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதவி காலத்தை முழுமையாக பூர்த்தி செய்யவில்லை என்பதோடு, ஜனாதிபதி பதவி என்பது அவரைப் பொறுத்த மட்டில் கைக்கு எட்டாத ஒன்றாகவே உள்ளது.

நாடாளுமன்ற மீள் பிரவேசத்தின் பின்னர் அப்போதைய பிரதமர் மகிந்தவும், ரணிலும் பங்கேற்ற இரவு விருந்தொன்று பல சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக இப்போதைய மாற்றங்கள் அப்போதே சர்ச்சைகளாக வலம் வந்தன என்றுகூட கூறலாம். இதன் பின்னரான நாட்களில் இலங்கையின் பொருளாதாரம் அதளபாதாளத்தில் விழுந்த போது, இலங்கையின் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து வந்த பின்னணியில், ரணில் விக்ரமசிங்கவின் ஆளுமை மற்றும் அவருக்கு சர்வதேசத்தில் இருக்கும் தொடர்புகள், அதனை கையாளும் திறன் ஆகியவற்றினால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் தற்போதைய நெருக்கடிக்குத் தீர்வு காணும் திறன் அவருக்கிருப்பதாக பலரும் கருதினர். இவ்வாறானப் பின்னணியில் தற்போதைய பிரதமராக ரணில் பதவியேற்றிருந்தாலும் கூட அவரது இலக்கு அடுத்த தலைமைப் பொறுப்பே என பலராலும் சுட்டிக்காட்டப்படுகின்றது. அரசியல் களத்தைப் பொறுத்தமட்டில் ரணில் விக்ரமசிங்க ஒரு குள்ளநரியாக பலராலும் வர்ணிக்கப்படுகின்றார். அதற்கு சிறந்த உதாரணமாக ஒரு தேசியப் பட்டியல் ஆசனத்தை வைத்துக் கொண்டு தற்போதைய ஆட்சி அதிகாரத்திற்கு வந்தமையை கூறலாம். தோல்விகள் மட்டும் அல்ல ரணிலை சர்ச்சைகளும் காலத்திற்கு காலம் சூழ்ந்து கொண்டுதான் இருந்தன. குறிப்பாக மத்திய வங்கியில் மேற்கொள்ளப்பட்ட பிணை முறி மோசடி ரணிலின் பெயருக்கு மிகப்பெரிய களங்கத்தை கொண்டு வந்திருந்தது.

எனினும், அந்தக் குற்றச்சாட்டுக்களையோ, வசைபாடல்களையோகண்டுகொள்ளவோ, எதிர்வினையாற்றும் செயலையோ ரணில் செய்யவில்லை. அதிலும், மத்திய வங்கியின் பிணைமுறியுடன் தொடர்புடையவர்கள் எனது வாளுக்கு இலக்காவார்கள் என்று தனது இறுதி ஜனாதிபதி பதவி இருக்கும் நாள் வரை பூச்சாண்டிக் காட்டிக்கொண்டிருந்த மைத்திரியின் வசைபாடலுக்கும் அவர் இசைந்து கொடுத்ததில்லை. அதேசமயம், **அரசியலில் எதிர்வுகூறும் திறன் ரணிலுக்கு அதிகம் இருப்பது அனைவரும் அறிந்தது,** இதனை வைத்துதான் என்னவோ 2020இல் பொதுத் தேர்தலில் படுதோல்வியைச் சந்தித்தபோதும் தமது கட்சியினரை அமைதிகாக்குமாறும், சிறிது காலத்தின் பின்னர் நிலைமை தலைகீழாக மாறும் அப்போது நாம் செயலாற்றலாம் என அறிவித்ததாக செய்திகள் பல வெளிவந்திருந்தன.

அந்த தீர்க்கதரிசனத்தின் விளைவு என்று கூட இதனைச் சொல்லலாம். ஆனால், **இந்த பொருளாதார நெருக்கடியை ரணிலால் தீர்க்க முடியும் என்பதற்கு காரணம், அவரது சர்வதேச தொடர்புகளும், தந்திரங்களும், எதிர்வுகூறும் திறனும், கையாள வேண்டிய நடைமுறையும் அறிந்திருப்பதாலாகும்.** அவரை நரி என்று கூற அவரது ஆளுமைக் கூட காரணமாக இருக்கலாம். மிகவும் பொறுமையாக இருந்து, அலட்டல் இல்லாத ரணிலின் காய் நகர்த்தல்களும், அரசியல் நாகரீகமும் கூட அவரின் இந்த பெயருக்குக் காரணமாக இருக்கலாம். சிலர் கோபத்தால் அவரை நரி என்று வசைபாடவும் கூடும்.

இந்த நிலையில் சர்வதேச ஊடகம் ஒன்றின் செய்தியின்படி, எந்தவொரு தலைவனுக்கும் இல்லாத சர்வதேச தொடர்பு ரணிலுக்கு இருக்கின்றது என்பது அறியக் கிடைத்தது. **ரணில் விக்ரமசிங்கவின் ஆளுமை, பொறுமை, ராஜதந்திர உறவு, அவசரத்தில் தீர்மானங்களை எடுக்காமை மற்றும் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் திறன் போன்றன கூட அவரை நரி என்று சொல்ல காரணமாக இருக்கலாம்.** எனினும் புதிதாக அவர் பிரதமர் பதவியை தற்போது ஏற்றிருந்தாலும் கூட இதற்கு பின்னாலும் அவரது சில தந்திரங்கள் இருப்பதாகவே கருத்துக்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக பிரதமர் பதவியை ஏற்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச பலருக்கு அழைப்பு விடுத்திருந்தபோதும், சஜித் மற்றும் அநுர உள்ளிட்டவர்கள் ஜனாதிபதி கோட்டாபய பதவி விலகினால் பதவியேற்கத் தயார் என்றனர். ஆனால், ரணில் ஒருவரே தான் பதவியேற்கின்றேன் ஆனால் அரசாங்கத்திற்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டங்களை கலைக்க நடவடிக்கை எடுக்கக் கூடாது என்ற உறுதியை கோட்டாபயவிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.

**11ஆம் பக்கம் பார்க்க...**

**இரணியன்**

தினப்புயல்
ஆசிரியர் பீடம்
இல:154, 6வது ஒழுங்கை
தேக்கவத்தை,
வவுனியா.

## பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை !

முப்பது வருடங்களாக போராட்ட வரலாறு நமக்கு தந்த பாடங்களை வைத்து தமிழ் தரப்பு அரசியல் காய்களை நகர்த்த தவறுகின்றபட்சத்தில் நாட்டின் பொருளாதார நிலைமை காலப்போக்கில் சீராக அமைந்தாலும். தமிழ் மக்களுக்கான தீர்வான பொலிஸ் காணி அதிகாரம், அரசியல் கைதிகள் விடுதலை.கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர். இனப்படுகொலைக்கான தீர்வு போன்றன குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ் தேசியக்கூட்டமைப்பு முன்வைத்துள்ள நிலையில் தமக்கான ஆதரவினை பெற்றுக்கொள்ளும் வகையில் மட்டுமே ரணில் விக்கிரமசிங்கவிடம் அரசியல் காய்நகர்த்தல்கள் நகர்த்தப்படுகின்றது எனலாம்.

தமிழ் தேசியக்கூட்டமைப்பின் 7பேர் ரணிலுக்கு ஆதரவாக வாக்களித்தமையினால் ரணில் விக்கிரமசிங்க தாம்பளத்தட்டில் தமிழ் இனத்திற்கான தீர்வினை பெற்றுத்தருவார் என்பது வெறும் பகல் கனவு மாத்திரமே. அவர் 2024ஆண்டு வரை தனது அரசியலையும் ஜனாதிபதி பதவியையும் தக்கவைத்துக்கொள்ளும் செயற்பாடுகளையே தற்பொழுது நகர்த்தி வருகிறார்.

ஆளும் கட்சியின் முக்கியமாக ஆட்சியாளர்களை பசில் ராஜபக்ஷ.மஹிந்த ராஜபக்ஷ.கோட்டபாய ராஜபக்ஷ. நாமல் ராஜபக்ஷ என தொடர்ந்து விக்கெட்டுக்களை சரித்தது தான் சிம்மாசனத்தில் அமர வேண்டும் என்ற ஒரு விதமான ராஜதந்திர நகர்வு ஆகும்.

ஆறுதடவை பிரதமர் பதவியையும். தற்பொழுது ஜனாதிபதி பதவியையும் எதிர்காலத்தில் தனது ஐக்கிய தேசிய கட்சியை வளப்படுத்தி மீளவும் கட்டவைத்து தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் ஆட்சி அதிகாரத்தில் இருந்து ஒதுங்குவாரே தவிர தமிழ் மக்களுக்கான தீர்வினை பெற்றுத்தர போவதில்லை. மாறாக தமிழ் தேசிக்கூட்டமைப்பின் ஒற்றுமையை சீர்குலைக்கும் நடவடிக்கைகளில் ஈடுப்பட்டு. தாயகம்.தேசியம்.சுயநிர்ணய உரிமையை குழித்தோண்டி புதைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவார் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

ஆகவே தமிழ் தேசியக்கூட்டமைப்பு உணர்ந்து கொள்கை அடிப்படையில் எமது தேசிய இலக்கை அடைவதற்கான அரசியலை முன் நகர்த்தினால் மட்டுமே. இந்த நாடு பொருளாதாரத்திலும். தேசிய ஒற்றுமையிலும்.வடகிழக்கு இணைந்த தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையையும் பெற்றும் வாழ முடியும். இல்லையேல் போராட்டங்கள் வேறு வடிவம் கொடுக்கும் எனலாம்.

185

# உலக வரலாற்றில் குறுஞ்சமர்



சண்டைச் சூழ்நிலையின்போது. உண்மையில் தீர்மானம் எடுப்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. அத்துடன். கட்டளை வழங்குவதற்கு சாத்தியமில்லை, தனியான வீரர்களினதம் ஒட்டுமொத்தக் குழுவினதும் தந்திரோபாயப் பதில் நடவடிக்கைகள் ஓநாய்க் கூட்டத்தின் உள்ளுணர்விற்கேற்ற கூட்டுச் செயற்ப்பாட்டுத் தரத்தை எட்டும்வரை (ஓநாய்க் கூட்டத்திலுள்ள ஒவ்வொன்றும் எதவிதக்கட்டளையுமின்றித் தமத செயற்பாடுகளைத் தெரிந்து வைத்திருப்பதைப்போல) அவசியம் பயின்றிருக்க வேண்டும்.

நீங்கள் சமதரைப் பிரதேசத்தில் நகர்ந்துக்கொண்டிருக்கின்றீர்களாக இருந்தாலும் ஆரம்பச் சூட்டுச் செயற்பாடுகள் முன்னயதைப் போலவே அதாவது. எதிரியை தாக்கி அவனை கீழே படுக்கச்செய்ய வேண்டும். உங்களது இயந்திரச் சுடுகலனாளர்கள் எதிரியை நித்திரைக்கொள்ள விடாமல் குறிபொருத்திய சூடுகளைத் தொடுக்கின்ற தருணத்தில். அவனை பக்கவாட்டாக சுற்றிவளைத்து. பக்கவாட்டாக நெருக்கி, பக்கவாட்டில் எதுவித காப்புகளுமற்ற எதிரியை சுட வேண்டும். பிரதான சூட்டு நகர்வை எதிரிக்கு எதிரிக்கு வலதுபுறத்தில் இருந்தே மேற்கொள்ள வேண்டும். இங்கும் இடது பக்க ஒழுங்கு மிகவும் குறைந்தளவு நேரத்திற்கு உங்களுக்கு சாதகமானதாக இருக்கும். உங்களின் ஆட்தொகை கூடுதலாக இருக்குமனால், எதிரியை நீங்கள் முற்றுகையிடலாம். அப்படி இல்லையாயின். முற்றுகையிலிருந்து அவன் வெளியேறுவதற்குப் பாதை உருவாக்கி, அவன் பின்வாங்கிச் செல்லும் சந்தர்ப்பத்தைக் கொடுங்கள். அவனை இன்னொரு சந்தர்ப்பத்தில் வெல்லலாம். அவசிய மேற்ப்படாமல் சூட்டுச்சமரைக் கைகலப்புச் சண்டையாக மாற்றாதீர்கள். உங்களின் ஆளணி குறைவாக இருந்தும் எங்கேனும் பின்வாங்க முடியாமலுமிருந்தால், உங்களை நெருங்கும் வரை காத்திராதீர்கள். உங்களது இயந்திர சூடுகளால் மற்றுகை வளையத்தின் ஒர இடத்தில் செறிவான தாக்குதலைத் தொடுங்கள். அணியின் பின்னுக்கிருப்பவர்களின் காப்புச் சூட்டினுதவியுடன், எதிரியை நொக்கி வெகமாக ஓடிச்சென்று. அவனத வியூகத்தை கையெறிக்குண்டினால் துளையிடுங்கள். உங்களத கையெறிக்குண்டின் வெடிப்பைத் தொடர்ந்து, ஏற்ப்பட்ட துளையினூடாக வேகமாகச் சென்று. உங்களது இயந்திரச் சுடுகலனைத் திருப்பி. எதிரி தலைதூக்க முடியாதவாறு அரைவட்ட வடிவில் சூடுங்கள். இப்பொழுது நீங்கள் அத்துளை எப்படி அகன்று இழமாகச் செல்கின்ற தென்பதைக் காண்பீர்கள்.

எதிரி வரிசையின் பலவீனமான இடத்தில் துளையிடுவதா என்பதை எப்பொழுதும் தர்க்க ரீதியில் கணிப்பிடுங்கள். ஏனெனில், அவனது பலமான பகுதிகளுக்கிடையில் நீங்கள் அகப்படுவீர்களானால், உங்களை சூடுகளால் இலகுவாக நெரங்குவதோடு. பக்க வாட்டுக்களிலிருந்தும் சுட்டுக்கொல்லலாம். எங்கே எதிரியின் வரிசை அடர்ந்த காட்டுக்குள் இருக்கின்றதோ அங்கே தாக்குவதே மிகப்பொருத்தமானதாகும்.

தோன்றியுள்ள குழப்பமான நிலையில் எதிரிப்படை வீரர்கள் சகபாடியின் சூட்டுக்குள் அகப்படாமலிப்பதற்காகத் தம்மைக் காப்பதில் இறங்கிவிடுவார்கள். இச்சூழ்நிலையைப் பயன்படுத்தி. வேகமாக இடதுபக்கமாக முன்னொக்கி ஓடிச்செல்ல வேண்டும். இவ்வாறாக நெரக்கமாக எதிரி இருக்கின்ற இடத்திற்கு வலது பக்கமாகச் செல்ல வேண்டும். ஆனால், அவசியம் எதிரிக்கு கிட்டவாகச் செல்ல வேண்டும். அவன் வலபக்கமாக திரும்பிச் சுட எத்தணித்தாலும். அவனது சுடுகுழல்கள் தமது சகபாடியின் முதுகை நோக்கியதாகவே இருக்கும். சாத்தியமாக இருக்குமென்றால். எதிரிக்கருகில் ஓடிச்செல்வது அருகருகே இருக்கின்ற மறைப்புக்களைப் பயன்படுத்தி அவனுக்குத் தெரியாவண்ணமும் மேற்கொள்ளலாம். அப்படி இல்லையாயின், யார் குண்டெரிவதற்காக ஓடிச்செல்ல உள்ளார்களோ. அவர்கள் செறிவான சூட்டால் காப்பளிக்கப்படுவார்கள். சாத்தியத்தைப் பொறுத்துத் தரையமைப்பையும் பயன் படத்துங்கள். அதாவது பள்ளத்தாக்குகள், சாய்வான இடங்கள் போன்றவற்றின் வழியே சூட்டுக்காப்புடன் ஊர்ந்து செல்லுங்கள். ஒருபோதும் உங்களது ஆட்களிடமிருந்து பிரிந்து சென்றுவிடாதீர்கள். யார் பிரிந்து சென்றானோ, அவன் தொலைந்தவனாகின்றான்.

உங்களது படைப்பிரிவில் ஒரு உறுப்பினராக மாத்திரமே செயற்படுங்கள். ஒழுங் கமைக்கப்பட்ட செயற்பாடுகளே கூடுதலாக வினைத் திறனுள்ளவையாகும். மேலே குறிப்பிட்ட சகல சூழ்நிலைகளிலும் சடுதியாக. துடுக்காக , கோரமாக. எதிரியைவிட வேகமாகச் செயற்படுங்கள். இதுவே முன்முயற்சியை உங்கள் பக்கம் வைத்திருத்தல் என அழைக்கப்படுகின்றது.


தேடுதல் மேற்கொள்கின்ற தருணத்தில் தீவிரமான சூட்டில் ஈடுப்பட்டுக்கொண்டிருக்கின்ற சிறிய குழுக்களை பின்தொடர்வதில் நாட்டம் செலுத்தக்கூடாது. வுழக்கமாக இது பிரதான படைகளிலிருந்து திசைதிருப்பிச் செல்ல அல்லது பொறிக்குள் அழைத்துச் செல்லல் என அழைக்கப்படுகின்றது. எங்கே மாயன அமைதி நிலவுகின்றதோ, அங்கே தான் பிரதான இலக்கும் ஆபத்தும் இருக்கின்றது.

**தொடர்வான்....**

# குள்ளநரியின் அரசியல் நகர்வும் நாட்டி எதிர்கால பொருளாதாரமும்

இம்மாதம் இடம்பெற்ற புதிய ஜனாதிபதித் தேர்தலில் ஏற்கனவே பிரதமராகவும், முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷவின் ராஜினாமாவின் பின்பு பதில் ஜனாதிபதியாகப் பதவி வகித்தவருமான ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 134 நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளைப் பெற்று 52 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்றுள்ளார். இவருடன் போட்டியிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும 113 வாக்குகளைப் பெறுவாரென எதிர்த்தரப்பினரால் நம்பப்பட்ட போதிலும் அவரால் 82 வாக்குகளை மட்டுமே பெறமுடிந்தது.

இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் உரையாற்றிய ஜே.வி.பி. தலைவர் அனுரகுமார திசா நாயக்க இந்தத் தேர்தல் தொடர்பாகப் பல கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் சிலர் விலைக்கு வாங்கப்பட்டனர் எனவும் வெகுவிரைவில் அவை தொடர்பான விபரங்களை வெளியிட முடியுமெனவும் தெரிவித்திருந்தார்.



எது எப்படியிருந்தபோதிலும் கடந்த மாதம் 21ம் திகதி ரணில் விக்கிரமசிங்க சத்தியப் பிரமாணம் செய்ததுடன், கோத்தபாய ராஜபக்ஷவின் மிகுதிக் காலத்துக்கான ஜனாதிபதி ரணில் என்பது உறுதி செய்யப்பட்டு விட்டது.

இந்த நிலையில் பல ஊடகங்கள் உட்படப் பல்வேறு தரப்பினரும் ரணில் விக்கிரமசிங்கவின் புகழ்பாடத் தொடங்கி விட்டனர். கழுதை அதிகாரத்துக்கு வந்தாலும் கழுதைக்கு மிக அழகான கொம்பு எனப் பலர் துதிபாடுவது அப்படியொன்றும் அதிசயமில்லை.

ஆனாலும் இலங்கை வரலாற்றில் இரு பெரும் சாதனைகளை ஈட்டிய பெருமை ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்டு என்பதை எவரும் மறுத்துவிடமுடியாது.

சிங்கள பௌத்த மக்களின் ஞானத் தந்தையாகக் கருதப்படும் அநகாரிக தர்மபாலவின் சீடர்களும் 1915ல் முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளை வழி நடத்தியவர்கள் என்ற குற்றச்சாட்டில் சிறை சென்று, பின்பு சேர்.பொன்.இராமநாதனின் முயற்சிகளால் விடுவிக்கப்பட்டு சிங்கள மக்களின் நாயகர்களாகத் தம்மை நிலை நிறுத்திக் கொண்டவர்களும் இலங்கையின் சுதந்திரப் போராட்ட வீரர்களாகக் கருதப்படுபவர்களுமான எவ்.ஆர்.சேனநாயக்க, டி.எஸ். சேனநாயக்க, டி.பி.ஜெயதிலக, பரண் ஜெயதிலக, டி.ஏ.ஹேவவிதாரண போன்ற தலைவர்களால் உருவாக்கப்பட்டதே ஐக்கிய தேசியக் கட்சி.

டி.எஸ்.சேனநாயக்க, சேர்.ஜோன். கொத்தலாவலை, ஜே.ஆர்.ஜயவர்த்தன, ஆர்.பிரேமதாச போன்ற பிரசித்தி பெற்ற தலைவர்கள் அக்கட்சியின் சார்பில் பிரதமர்களாகவும் ஜனாதிபதிகளாகவும் மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஆட்சி நடத்தினர். அத்தகைய வரலாறு கொண்ட ஒரு கட்சியைத் தலைமை தாங்கி தானும் வெற்றி பெறாமல், தனது கட்சியைச் சேர்ந்த வேறு ஒருவர் கூட வெற்றி பெறாதவாறு 2020 பொதுத் தேர்தலின்போது வழி நடத்திய சாதனையைச் செய்தவர்.

மக்களால் தானும் தனது கட்சியும் முற்றுமுழுதாக நிராகரிக்கப்பட்ட நிலையிலும்கூட 69 இலட்சம் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட கோத்தபாயவின் பதவியை மக்களின் வாக்களிப்பின்றி அவருக்கு எதிராகக் காலிமுகத்திடலிலும் அலரி மாளிகையிலும் போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கும் நிலையிலும் ரணில் விக்கிரமசிங்க கைப்பற்றியுள்ளார். இது அவரின் இரண்டாவது வரலாற்றுச் சாதனை.

மக்களால் அதலபாதாளத்துக்குத் தள்ளப்பட்ட அவர் மக்களின் எதிர்ப்பின் மத்தியில், மக்களின் எதிர்ப்பால் ஏற்பட்ட ஒரு இடைவெளியூடாக அதிகாரத்தின் உச்சிக்கு ஏறிவிட்டார்.

இவரைப் பற்றி தத்துவமேதை அன்ரன் பாலசிங்கம் ஒருமுறை கூறும்போது, **"ரணில் ஒரு விஷப் பாம்பு. அவர் தூங்குவது போலவும், செத்து விட்டது போலவும் அசையாமல் கிடப்பார். நேரம் வரும்போது பாய்ந்து கொத்தி விடுவார்"** என்றார்.

தூங்குவது போலவும் செத்து விட்டது போலவும் கிடந்த ரணில் இப்போது எழுந்து படத்தை விரித்துவிட்டார். இனி அவர் யாரைக் கொத்தப் போகிறார் என்பதோ அல்லது அடி வாங்கி சுருளப் போகிறாரா என்பதோ தான் இப்போது எழும் கேள்விகளாகும்.

மக்கள் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர் தான் தன்னிடமுள்ள அதிகாரங்களைப் பாவித்துக் காய்களை நகர்த்தப் போகிறார். அவர் எப்படி ஆட்சியை முன்னெடுப்பார் என்பது தெரிந்தாலும் அவரின் வெற்றிக்கு அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளும் இந்தியாவும் வழங்கிய வாழ்த்துக்களும் வரவேற்புகளும் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளுக்கான அறிகுறிகளும் அவரின் அடுத்த கட்ட நகர்வை உறுதி செய்கின்றன.

இப்போதும் தீவிரமாகத் தொடரும் போராட்டங்கள் ஆரம்பிக்கப்படுவதற்கும், தீவிரமடைந்தற்கும் எரிபொருள், சமையல் எரிவாயு, பால்மா, உணவுப் பொருட்கள் என்பனவற்றின் விலைகள் திட்டமிட்டுப் பல மடங்காக உயர்த்தப்பட்டமையும், அவற்றைப் பெறுவதற்காக நாட்கணக்கில் மக்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலை ஏற்பட்டமையுமே காரணமாகும். நாடு பட்டினிச் சாவையும் கொடிய வறுமையையும் நோக்கித் தள்ளப்படுகிறது என்பது தெளிவான விடயமாகும். தற்சமயம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்க தீர்வுகளை முன்வைப்பாரா? இன்னும் வரிசைகளை அதிகரிப்பாரா? என்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும். அடுத்தகட்ட நடவடிக்கைகள் நேர்மையாகவும், தீவிரமாகவும் எடுக்கப்பட்டாலே போராட்டங்கள் ஓய்வுக்கு வருமென்பதை போராட்டச் செயற்பாட்டாளர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர். ஆனால் இப்பிரச்சினைகள் நேர்மையாகத் தீர்க்கப்படாது என்ற நிலையிலேயே போராட்டம் பொருளாதாரப் போராட்டங்கள் என்ற கட்டத்தைத் தாண்டி அரசியல் போராட்டமாக உருவெடுத்தன. ஆனால் போராட்டங்களை முறியடிக்கவும் போராட்டக்காரர்களிடையே பிளவுகளை ஏற்படுத்தவும் சட்டம், ஒழுங்கு, அமைதி என்ற பெயரில் வெவ்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இதைப் பற்றிப் போராட்டக்காரர்களின் முக்கிய செயற்பாட்டாளர்களில் ஒருவரான சமீர தெட்டுவகே **"ரணில் ஒரு இரக்கமற்ற நடைமுறைவாதி"** எனக் குறிப்பிட்டார். அதேபோன்று பிரபல அரசியல் பொருளாதார ஆய்வாளரான அகிலன் கதிர்காமர், **"ரணிலின் நடவடிக்கைகள், சிக்கனம், பொதுச் செலவுகளை குறைத்தல் என்பதை அடிப்படையாகக் கொண்டே அமையும்"** எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளையில் முன்னாள் இடதுசாரியான விக்டர் ஐவன் மற்றும் அரசியல் ஆய்வாளர்கள், பல்கலைக்கழகப் பொருளாதார வல்லுனர்கள் ஆகியோரும் கதிர்காமர் அவர்களின் கூற்றின் விளக்கமாகப் பல்வேறு ஊடகங்களிலும் கருத்துகளை முன் வைத்துள்ளனர்.

அதாவது தனியார் துறையை ஊக்குவித்தல், நட்டமடையும் அரச நிறுவனங்களைத் தனியார் மயமாக்கல், கல்வி, சுகாதாரம் போன்ற பொதுச் சேவைகளுக்கு ஒதுக்கும் நிதியைக் குறைத்தல், அரச ஊழியர்களின் தொகையை சரி பாதியாகக் குறைத்தல், மானியங்கள் வழங்கப்படுதலை நிறுத்தல் போன்ற நடவடிக்கைகளே அவையாகும். இவையனைத்தும் சர்வதேச நாணய நிதியம் கடன் வழங்குவதற்கான நிபந்தனைகளுக்கு அமைவானவையேயாகும்.

இங்கு ரணில் ஜனாதிபதியானவுடன் அமெரிக்கா வாழ்த்தி வரவேற்றதையும் இலங்கையுடன் ஒத்துழைக்கத் தயார் என அறிவித்ததும், சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் உடனடியாக இங்கு கடன் வழங்குவது பற்றிப் பரிசீலிக்க வருவதும் ரணில் இதுவரை எடுத்த எடுக்கப்போகும் நடவடிக்கைகளுக்கான திசை காட்டிகளாகும். எனவே ரணிலின் நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், எரிவாயு விநியோகம், எயர் லங்கா நிறுவனம், உருக்காலைக் கூட்டுத்தாபனம், சீமெந்து உற்பத்தி, கடதாசிக் கூட்டுத்தாபனம், ஓடு, கூரைத் தகடு உற்பத்திகள் போன்ற கைத்தொழில், வர்த்தக நிலையங்கள் அந்நிய நிறுவனங்களுக்கு விற்கப்படும். அதற்கான காரணம் நட்டத்தைத் தவிர்த்தல் எனக் கூறப்படும். உண்மையில் இலஞ்சம், ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம் என்பன தவிர்க்கப்பட்டால் இவை நட்டமடைய முடியாது. எனவே எமது பிரதான உற்பத்தி வர்த்தகம் என்பன அந்நியப் பெரும் நிறுவனங்களின் கைகளுக்குப் போய்விடும். புல்மோட்டை இலுமனைட், எப்பாவல பொஸ்பேற் ஆகிய கனிய வளங்கள் ஏற்கனவே விற்கப்பட்டது போன்று எமது இரத்தினக் கல் வளம், கடலட்டை, றால், கணவாய் போன்ற கடல் வளங்களும் விற்கப்படும் அபாயம் ஏற்படும். அரசாங்க சேவை, துணை அரச நிறுவனங்கள் என்பவற்றில் ஆட்குறைப்புச் செய்யும்போது ஏற்படும் வேலையின்மை காரணமாக மக்களின் வாங்கும் சக்தி நலிவடைய வறுமை நிலை மேலும் கூடும். பொதுச்செலவுகள் மட்டுப்படுத்தப்படும்போது கல்வி, சுகாதாரம் என்பவற்றுக்கு மக்கள் சொந்தப் பணத்தையே செலவு செய்யும் நிலை ஏற்படுமாதலால், அவை பெருமளவு மக்களுக்குக் கிட்டாமல் போய்விடும். கடந்த அரசாங்கத்தின்போது ஒரு அந்தர் பசளை 3000 ரூபாவுக்கு வாங்கி அரசாங்கத்தின் 2,000 ரூபா மானியம் காரணமாக விவசாயிகளுக்கு ஆயிரம் ரூபாவுக்கு வழங்கப்பட்டது. மானியம் நிறுத்தப்படும்போது அதன் காரணமாக உணவுப் பொருட்களின் உற்பத்திச் செலவு அதிகரிக்கும். அதனால் அவற்றின் விலை அதிகரிக்க விற்பனை வீழ்ச்சியடையும் அதன் காரணமாக மக்களுக்கு உணவுப் பொருடகளை வாங்கமுடியாத நிலைமையும் விவசாயிகள் வறுமையில் தள்ளப்படும் நிலைமையும் உருவாகும்.

இதுதான் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின்படியான தனியார் முதலீடுகளை ஊக்குவித்தல், சிக்கன நடவடிக்கைகளை மேற்கொள்ளல், வீண்விரயங்களைத் தவிர்த்தல், அரச செலவினங்களைக் குறைத்தல், உற்பத்தியைப் பெருக்கல் என்பனவற்றின் அர்த்தமாகும். அப்போது பொருட்களுக்குக் தட்டுப்பாடு இருக்காது. ஆனால் அவற்றை வாங்குமளவுக்கு மக்களிடம் பணமிருக்காது. எனினும் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற அன்றே போராட்ட செயற்பாட்டாளர்களாகிய முன்னாள் அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் வசந்த லியனகே மற்றும் போராட்டத்தில் பிரதான பாத்திரம் வகிக்கும் தேரர் ஒருவர் என இருவர் மீதும் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. அன்று நள்ளிரவு காலிமுகத்திடலில் கோத்தா கோ கம போராட்டக்காரர்கள் மீது பொலிஸாரும் இராணுவத்தினரும் வன்முறைகளைப் பிரயோகித்து கூடாரங்களைப் பிய்த்தெறிந்ததுடன் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். அதன் காரணமாக 8 பொது மக்கள் படுகாயப்படுத்தப்பட்டனர்.

இதிலிருந்து புதிய ஜனாதிபதியின் தலைமையில் இலங்கையின் எதிர்காலம் எப்படி அமையும் என்பதற்கான அறிகுறிகள் தெளிவாகியுள்ளன. **ரணில் விக்கிரமசிங்கவின் செத்தவன் போல் கிடந்து சந்தர்ப்பம் வாய்க்கும்போது பாய்ந்து கொத்தும் நயவஞ்சகம் வெகுவிரைவில் அதற்கான எதிர்விளைவைச் சந்திக்கும்.**

II ஆம் பக்க பார்க்க...


# இலங்கையின் சூழலை பொருளாதார ஒத்துழைப்பால் ஆக்கிரமிக்க முயல்கிறதா இந்தியா? – பேராசிரியர் கே.ரீ.கணேசலிங்கம்!

இலங்கை -இந்திய நட்புறவு புவிசார் அரசியலுக்கூடாகவே அதிகம் விளங்கிக் கொள்ள முயலப்படுகிறது. ஆனால் அத்தகைய புவிசார் அரசியல் அனைத்து விடயங்களிலும் கவனம் கொள்ள முயலுகிறது. குறிப்பாக இலங்கைக்குள் ஏற்பட்ட அரசியல் பொருளாதார நெருக்கடியை தீர்க்கும் வகையில் தொடர்ச்சியாக நிதி மற்றும் பொருளாதார உதவிகளையும் நன்கொடைகளையும் கடன்களையும் இந்தியா வழங்குவதில் புவிசார் அரசியலாகக் கவனம் கொண்டுள்ளது. இலங்கைத் தீவை அமெரிக்கா மற்றும் சீன வல்லரசுகள் ஆதிக்கம் செலுத்த முனையும் சூழலில் இந்தியா பொருளாதாரமாக உதவவும் இலங்கையின் மீள் எழுச்சிக்கு கைகொடுக்கும்விதத்திலும்செயல்படுவதன் மூலமும் தனது செல்வாக்கினை பலப்படுத்த விளைவதாகவே தெரிகிறது. இதனால் இந்தியா இலங்கையை தனது நிலமாக கருதும் நிலை ஏற்படுகின்றதா என்ற விமர்சனம் எழுந்துள்ளது. இக்கட்டுரையும் இந்திய -இலங்கை உறவில் காணப்பட்டுவரும் மாற்றங்களையும் அதன் விளைவுகளையும் தேடுவதாக அமையவுள்ளது.

முதலாவது, இந்தியப் பாராளுமன்றத்தின் ஆலோசனைக்குழுக் கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் உரையாற்றும் போது இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிக்கு இந்தியா உதவ வேண்டும் என்றதகவலை தெரிவித்ததுடன் அதற்கான முக்கியத்துவத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினை குறித்து நடைபெற்ற விவாதம் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய கடினமான நேரத்தில் அயல் நாட்டுக்கு ஒருமித்த ஆதரவு வழங்க முன்வந்திருப்பது சிறப்பானது. இந்த முக்கிய தருணத்தில் இலங்கைக்கு உதவுவதில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கிறது என தனது டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இரண்டாவது இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமை இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் மிலிந்த மொறகொட சந்தித்த(21.06.2022) போது இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும்இந்தியா வழங்குமென உறுதியளித்துள்ளார். தொடர்ந்து அவர் குறிப்பிடும் போது இலங்கை நெருக்கடியிலிருந்து மீண்டுவரும் எனவும் தெரிவித்தார்.

மூன்றாவது, இந்தியாவின் உயர்மட்ட தூதுக் குழுவினர் 23.06.2022 இலங்கைக்கு வருகை தந்துள்ளனர். பொருளாதார ஆலோசகர் ஆனந்த நாகேஸ்வரன் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் வினாய் குவாத்ரா அத்துடன் பொருளாதார அலுவலகத் திணைக்களத்தின் செயலாளர் அடங்கிய குழுவினர் வருகைதந்துள்ளனர். பொருளாதார நெருக்கடி குறித்து தூதுக் குழு அதிக கவனம் செலுத்தும் என எதிர்பார்ப்பதுடன் இக்குழுவினர் இலங்கையின் ஜனாதிபதி பிரதமரைச் சந்தித்து உரையாடவுள்ளதாகவும் தெரியவருகிறது. இதில் ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது நாட்டில் ஏற்பட்டுள்ள



பொருளாதார நெருக்கடியில் குறுகிய நீண்ட கால உதவித் தேவைகள் குறித்து கலந்துரையாடியதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிக்கை வெளியிட்டுள்ளது. அதனை அடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்ஹாவைச் சந்தித்தனர். இச்சந்திப்பில் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பால்கே கலந்து கொண்டார்.

எனவே இந்தியா இலங்கையை முழுமையாக மீட்டெடுக்க உதவுவதற்கான சூழலையே வெளிப்படுத்துவதாக தெரிகிறது. இதன் மூலம் இலங்கை மக்கள் இந்தியாவின் பொருளாதார ஒத்துழைப்புக்குள்ளால் நிமிர வாய்ப்பு அதிகரித்துள்ளது இந்தியா நேரடியாகவே செயல்பட ஆரம்பித்துள்ளது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்தியா இலங்கைத் தீவை மீட்டெடுப்பதில் அதிக கவனம் கொண்டு செயல்படுகின்றது. இலங்கைத் தீவில் எழுந்துள்ள நெருக்கடியைப் பயன்படுத்திக் கொண்டு பிற தேசங்கள் அதிக ஈடுபாட்டைக் காட்ட முன்வந்த போதும் அதற்கான வாய்ப்புக்களை வழங்காது இந்தியா நகர்வை அதிகரித்துள்ளது. அமெரிக்க தூதுக்குழுவின் வருகைக்கு முன்பே இந்தியாவின் நடவடிக்கை தீவிரம் பெற்றுள்ளது. இந்திய பாராளுமன்ற ஆலோசனைக் குழுவினர் முதல் பொருளாதார நிபுணர்கள் அடங்கிய தரப்பு வரை இலங்கை விடயத்தில் இந்தியாவின் போக்கு அதிகரித்துள்ளது. இத்தகைய பொருளாதார உதவிகளுக்குப் பின்னால் பரஸ்பரம் இரு தரப்புக்கும் இடையிலேயே வெளிப்படுத்த முடியாத உடன்பாடு நிலவுவது தவிர்க்க முடியாததாகும்.

குறிப்பாக இலங்கை ஆட்சியாளர்களது இருப்பினை பாதுகாக்கக் கூடிய அரசாக இந்தியா மட்டுமே முதன்மையானதாக உள்ளது. அமெரிக்காவும் சீனாவும் பிற தேசங்களும் உலக வங்கியின் நிபந்தனைக்குள் அகப்பட்டிருப்பதுடன் இலங்கைத் தீவில் ஓர் ஆட்சி மாற்றத்தை அதிகம் விரும்புகின்றதை அவதானிக்க முடிகிறது. போராட்டகாரர்களை பாதுகாக்கும் அனைத்து நடவடிக்கைகளையும் அமெரிக்க பிரிட்டன் தூதுவர்கள் மட்டுமல்ல ஐக்கிய நாடுகளுக்கான தூதுவரும் கவனம் கொண்டுள்ளதை காணமுடிகிறது. போராட்ட குழுக்களது நடவடிக்கைகள் மட்டுமல்ல அதற்கான மக்கள் ஆதரவையும் பாதுகாப்பதில் மேற்கு நாடுகளின் தூதுவர்கள் முக்கிய கவனம் செலுத்துகின்றனர்.

சீனாவைப் பொறுத்தவரை அமெரிக்காவுடன் கூட்டுச் சேர்ந்தாலும் முன்னாள் பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் வெளியேற்றத்தை ஏற்றுக் கொள்ளாத நிலையையே கொண்டுள்ளது. ஆனால் இலங்கைத் தீவில் தனது செல்வாக்கினை இழந்துவிடக் கூடாது என்பதில் கவனமாக செயல்படுகின்றதைக் காணக்கூடியதாகவே உள்ளது. எதுவாயினும் இலங்கைத் தீவில் அமெரிக்கா சீனாவின் செல்வாக்கின் எல்லையை மட்டுப்படுத்தவே முனைகிறது. அதற்கான நகர்வே சீனாவுடனான கூட்டை அமெரிக்கா கருதுகிறது. இந்த சூழலிலேயே அமெரிக்கா சீனாவைக் கடந்து செயல்பட முனைகிறது. இலங்கைத் தீவை ஆதிக்கம் செய்வதற்கான வாய்ப்பினை அமெரிக்கா அதிகரித்துள்ளது. சீனாவின் போக்கில் காணப்படும் பலவீனத்தை பயன்படுத்திக் கொண்ட அமெரிக்கா தனது விசேட தூதுக்குழுவை அழைத்து இலங்கையுடன் கைகோர்க்க முனைகிறது. இதனைக் கையாளுவதற்கான நகர்வையே இந்தியா வேகப்படுத்தியுள்ளது. முன்கூட்டியே இந்திய உயர்மட்டக் குழுவினரது இலங்கை வருகை சாத்தியமான விளைவுகளைத் தந்துள்ளது.

இலங்கைக்கான பொருளாதார வாய்ப்புக்களை அதிகரிப்பதன் மூலம் அரசியல் இராணுவ ரீதியான நெருக்கத்தை இந்தியா இலங்கையுடன் மேற்கொள்ள முடியும். சீனா கடந்த காலத்தில் இலங்கையுடன் மேற்கொண்டிருந்த முக்கியத்துவத்தை இந்தியா கைப்பற்ற முனைகிறதென்பது அவசியமான புவிசார் அரசியலாகும். அதனை நோக்கி இந்தியா செயல்படுவதென்பது இந்தியாவின் இலங்கைக்கான பொருளாதார உதவிகளிலிருந்து புரிந்து கொள்ள முடிகிறது. அத்தகைய உதவிக்கு பின்னால் பாரிய ஒத்துழைப்பின் விளைவுகளை அடைய இந்தியா செயல்படுவதைக் காணலாம். பொருளாதார உதவிகளாலேயே உலக நாடுகளை சுற்றிவளைக்கப்படுகின்றது. அதிலும் வறிய நாடுகள் கைப்பற்றப்படுவதும் வலுவான நாடுகளால் ஆதிக்கம் செய்யப்படுவதும் இயல்பான அரசியலாக உள்ளது. இதனையே இந்தியா மேற்கொண்டுவருகிறது.

ஆனால் ஆப்கானிஸ்தான் அனுபவத்தை இந்தியா இலங்கை விடயத்தில் கவனம் கொள்ளுமா என்பது முக்கியமான கேள்வியாகும். ஏறக்குறைய இலங்கை தீவின் அரசியல் இயல்பு ஆப்கானிஸ்தான் போன்றே காணப்படுகிறது. அதனை பலதடவை இந்தியா இலங்கையில் எதிர்கொண்டுள்ளது என்பது இந்தியாவின் கொள்கை வகுப்பாளர்களுக்கு நன்கு தெரிந்த விடயமாகும். அதனால் இலங்கையை சரியாக கையாளும் திறனுடன் செயல்படுபவர்கள் என்ற முடிபுக்கு வந்துவிட முடியாது. ஆனாலும் இலங்கை தீவுக்கு இந்தியாவே தற்போது பாதுகாப்பான நட்பு நாடாகவுள்ளது. அதனையே இந்திய வெளியுறவு அமைச்சர் பாராளுமன்ற ஆலோசனைக்குழுவிலும் தெரிவித்துள்ளார். ஏனைய நாடுகளை விட இந்தியா இலங்கை அரசையும் ஆட்சியையும் பாதுகாக்கும் நிலையிலுள்ள தேசமாக உள்ளது. இந்தியாவின் அனைத்து பொருளாதார ஒத்துழைப்புகளையும் இலங்கைத் தீவின் ஆதிக்க மகாசங்கங்கள் அமைதியாக ஏற்றுக் கொண்டுள்ளதைக் காணமுடிகிறது. காரணம் அரசையும் ஆட்சியையும் பாதுகாக்க வேண்டிய நிலைக்கு தற்போதைய சூழலில் இலங்கைத் தீவு தள்ளப்பட்டுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கைத் தீவு முழுமையாக இந்தியாவின் செல்வாக்குக்குள் உட்பட வேண்டும் என்பது பிரதான நோக்கமாகவுள்ளது. அதற்கான வாய்ப்பான காலப்பகுதியாகவே தற்போதைய சூழலை பயன்படுத்திக் கொள்ள முனைகிறது. இந்தியாவுக்கு இலங்கையின் வடக்கு கிழக்கு மட்டுமன்றி இலங்கைத் தீவு முழுவதும் அதன் நலனுக்கு அவசியமான தீவாக உள்ளது. பிற வல்லரசுகளது தலையீட்டை தவிர்ப்பதுடன் இந்தியாவை சூழவுள்ள நெருக்கடியை தவிர்க்கவும் பாதுகாக்கவும் உதவக் கூடிய தீவாக இலங்கை காணப்படுகிறது.

இந்தியாவும் இலங்கையும் தெளிவான இலக்குடன் பயணித்தாலும் இலங்கை ஆட்சியாளர்கள் வெற்றிகரமாக செயல்படும் திறனுடையவர்கள் என்பதை கடந்த காலத்தில் நிறுவியுள்ளனர். அதனால் இந்தியாவின் முழுமையான ஒத்துழைப்புடன் வெற்றிகரமான தற்போதைய நெருக்கடியை கடந்துவிடுவார்கள் என்ற கருத்து நிலவுவது சரியானதாகவே தெரிகிறது. அதற்கான வாய்ப்பு அதிகமாகவுள்ளது. ஈழத்தமிழருக்கான இந்தியாவின் அனுசரணையை விட இலங்கைத் தீவுக்கான ஒத்துழைப்பு விரிவடைந்துள்ளது. தமிழகத்தின் நிலைப்பாட்டைக கடந்து சென்னை - புதுடில்லி - கொழும்பு உறவு வலுவடைந்து வருகிறது. **இலங்கைக்கான அரசியல் பொருளாதார நெருக்கடி புதிய வாய்ப்புக்களையும் சந்தர்ப்பங்களையும் இலங்கை ஆட்சியாளர்களுக்கு வழங்கியுள்ளது.** ஈழத்தமிழர்கள் புதுடில்லியிலிருந்து மட்டுமல்ல சென்னையாலும் அன்னியப்படுத்தப்படுகிறார்கள்.

இதன் விளைவு ஈழத்தமிழருக்கு மட்டுமல்ல இந்தியாவுக்குமானதாக அமைய வாய்ப்புள்ளது. ஒத்துழைப்புக்களை மட்டும் இந்தியத் தரப்பு இலங்கைக்கு வழங்க நிச்சயம் முன்வராது என்பது தெளிவானாலும் இலங்கைத் தரப்பு இந்தியாவை இலகுவில் வெற்றிகண்டுவிடும் என்ற அனுபவம் கடந்த காலங்களில் உண்டு என்பது தவிர்க்க முடியாததாகும்.



# முள்ளிவாய்க்கால் படுகொலைகள் மூலம் மெதமுலான வம்சத்தைச் சேர்ந்த ராஜபக்ஷ் குடும்பத்தினர் உலகக் கொலைகார மனித குல விரோதிகள் பட்டியலில் தங்கள் பெயர்களையும் ஆழப்பதித்துக் கொண்டனர்

60 இலட்சம் யூதர்களை ஜேர்மனிய வதை முகாம்களில் தடுத்து வைத்து சித்திரவதை செய்து கொன்று குவித்த ஹிட்லரைப் போல, தன்னை ஆட்சி பீடம் ஏற்றக் கரம் கொடுத்த சோஷலிஸ்டுகளைக் கொன்று அதிகாரத்தைக் கைப்பற்றிய முசோலினியைப் போல, கொலைகளை ஒரு கலையாக விதம் விதமாகச் செய்து கூத்தாடிய இடி அமீனைப் போல, அதிகாரத்தைத் தக்க வைக்கும் ஒரே ஆயுதம் மனிதப் படுகொலைகளே என நம்பிய முன்னாள் பிலிப்பைன்ஸ் அதிபர் மார்க்கோஸ் போல், அமெரிக்காவின் பூர்வ குடிகளான மாயா, சின்கா இன மக்களை இன அழிப்புச் செய்து நாட்டைக் கைப்பற்றிய ஸ்பானிய, பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்களைப் போல்-உலக மனிதப் படுகொலையாளர்கள் பட்டியலில் தலைசிறந்த இன அழிப்பாளர்கள் வரிசையில் ராஜபக்ஷ் சகோதரர்கள் தங்களுக்கெனத் தனியிடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளனர்.

உயிரைக் காக்க ஒவ்வொரு இடமாக ஓடியோடி இடம் பெயர்ந்த மக்களை பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் 4 கி.மீ. நீளமும் 3 கி.மீ. அகலமும் கொண்ட மாத்தளன் - முள்ளிவாய்க்கால் சிறிய பரப்பில் ஒதுக்கிவிட்டு விமானக் குண்டுகளாலும் எறிகணைகளாலும் தொலைதூரத் துப்பாக்கி வேட்டுகளாலும் கொன்று குவித்து மகிழ்ச்சிக் கூத்தாடிய பெருமை ராஜபக்ஷ் சகோதரர்களுக்கே உரியதாகும்.

ஒரு சில நாட்களிலேயே முள்ளிவாய்க்கால் பாதுகாப்பு வலையத்திற்குள் 40,000 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர் என்பது ஐக்கிய நாடுகளின் செயற்கைக் கோள் வெளியிட்ட கணக்கு.

அதற்காக ராஜபக்ஷக்கள் வெட்கப்படவில்லை. மாறாகப் பெருமைப்பட்டார்கள். தாங்கள் நடத்தியது போரல்ல, மனிதாபிமான நடவடிக்கையென மாய்மாலம் கொட்டினர். தாங்கள் புலிப் பயங்கரவாதிகளிடமிருந்து தமிழ் மக்களை மீட்டெடுத்த ரட்சகர்கள் என மார்தட்டினர்.

அவர்களின் மனிதாபிமான நடவடிக்கையும் மீட்டெடுப்பும், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் உயிரிழப்பில், உடல் ஊனங்களில், பட்டினியில் பசியில் தாங்க முடியாத அவலங்களில் பிறப்பெடுத்தவையாகும்.

வெளிநாடு சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த வெற்றிச் செய்தி கேட்டு நாடு திரும்பி விமான நிலையத்தில் கால் பதித்ததும் மண்ணை முத்தமிட்டு வணங்கி விட்டு **"எனது முதலாவது தெரிவும் இரண்டாவது தெரிவும் மூன்றாவது தெரிவும் தாய் நாடே"** என்றார். பின்பு காலி முகத்திடலில் இடம்பெற்ற வெற்றி விழாவில் இனி இந்த நாட்டில் **"பெரும்பான்மை சிறுபான்மை என எவருமில்லை, "எல்லோரும் ஒரே நாடு, ஒரே மக்கள்"** என்றார்.

அதாவது **"இனி இந்த நாட்டில் தமிழர், முஸ்லிம்கள் என சிறுபான்மை இனங்கள் இல்லை, எல்லோரும் சிங்களவர்களே!"** என்ற உள்ளார்த்தத்துடன் அவர் சொன்னதை, எதிர்காலத்தில் எல்லோரும் சிங்கள மயப்படுத்தப்படுவர் என்பதைப் பலர் புரிந்து கொள்ளவில்லை. ஆனால் ராஜபக்ஷ் சகோதரர்களின் ஒவ்வொரு நகர்வுகளும் போகப்போக அதைப் புலப்படுத்தின.

ஆரம்பத்தில் ஒரே நாட்டுக்குள் உரிமையுள்ள மக்களாக வாழ்வதைத் தானே தமிழ் மக்கள் கோரினார்கள். அஹிம்சை வழியில் போராடினார்கள். இணங்கப்பட்ட ஒப்பந்தங்கள் கிழிக்கப்பட்டு தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள். அஹிம்சைப் போராட்டத்திற்கு இனப்படுகொலைகளால் பதிலளிக்கப்பட்டன. எனவே தான் தமிழ் மக்கள் தனிநாடு கோரி ஆயுதமேந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

தமிழ் மக்கள் சிங்கள மக்களின் நிலத்தைக் கேட்கவில்லை, ஆறுகளில் ஓடும் நீரைக் கேட்கவில்லை. ஓங்கி வளர்ந்த சிங்களத்தின் அடர் வனங்களைக் கேட்கவில்லை.

பரம்பரைபரம்பரையாக தாங்கள் உழுதுண்டு செழிப்புடன் வாழும் தங்கள் மண்ணைத்தான் கேட்டார்கள். அதற்குப் பிரிவினைவாதமென்றும் பயங்கரவாதம் எனவும் பெயர் சூட்டி, தமிழ் மக்களின் தலைக்கு நேரே துப்பாக்கிகளை உயர்த்தினர்.

தமிழ் மக்கள் தங்களுக்கே உரித்தான உரிமையைத் தானே கோரினார்கள்? அதற்குச் சிங்கள தேசம் தந்த பதில் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர் பறிப்பாகும்.

30 வருடங்களாகத் தமிழ் மக்கள் தம் உழைப்பைக் கொடுத்துத் தேடிய சொத்துக்களை இழந்து, உடல் ஊனங்களையும் பொருளாதாரத் தடைகளின் கொடுமைகளையும் அனுபவித்து, உயிர்களையும் அர்ப்பணித்து முன்னெடுத்த விடுதலைப் போராட்டம் 2009 மே மாதம் முள்ளிவாய்க்காலில் பேரிழப்பை எதிர்கொண்டது. இலங்கை அரசின் நயவஞ்சகம் 23 நாடுகள் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்பு எல்லாம் சேர்ந்து தமிழீழ விடுதலைப் போராட்டம் பெரும் பின்னடைவை எதிர்கொள்ள வைத்தன.

மஹிந்த ராஜபக்ஷ் போரை வெற்றி கொண்ட சக்கரவர்த்தியாகவும் கோத்தபாய ராஜபக்ஷ் போரை வழிநடத்திய தளபதியாகவும் தம்மை வீரநாயகர்களாக்கி வீறு நடைபோட்டனர். போரால் வெற்றி கொள்ளப்பட்ட தமிழ் மக்கள் மீது மேலும் மேலும் நில ஆக்கிரமிப்பு, வணக்க ஸ்தலங்களுக்கு உரிமை கொண்டாடுவது, பொருளாதார மேலாதிக்கம் எனப் பல வழிகளிலும் ஒடுக்குமுறைகள் தொடர்ந்தன. அவ்வாறே பள்ளிவாசல்கள் மேல் தாக்குதல்கள், வர்த்தக நிலையங்கள், குடியிருப்புகள் மேல் தாக்குதல்கள், இன அழிப்புக் கலவரங்கள் என முஸ்லிம் மக்கள் மீது அடக்குமுறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டன.

அதாவது ஒரே நாடு ஒரே மக்கள் என்ற கோஷத்தை நடைமுறைப்படுத்தும் நோக்கில் வன்முறைகள் மேற்கொள்ளப்பட்டன. மெதமுலான சகோதரர்களின் வார்த்தை ஜாலங்களை நம்பி சிங்கள மக்களும் "ஒரே நாடு, ஒரே மக்கள்" என்ற சுலோகத்தின் பின் அணி திரண்டனர்.



2020ல் கோத்தபாய ராஜபக்ஷ் ஜனாதிபதியாகவும் மஹிந்த ராஜபக்ஷ் பிரதமராகவும் பதவியேற்ற பின்பு மெல்ல மெல்ல ராஜபக்ஷ்களின் உண்மையான உருவத்தைச் சிங்கள மக்கள் விளங்கிக் கொள்ள ஆரம்பித்தனர்.

நாட்டுக்குப் பயன் தராத பிரமாண்டமான திட்டங்கள், தேசிய உற்பத்திகளில், அக்கறையின்மை, பிரமாண்டமான கட்டிடங்களாலும் நெடுஞ்சாலைகளாலும் நாட்டை அழகுபடுத்தல், பெருந்திட்டங்களை நிறைவேற்றப் பெற்ற பெருந்தொகை கடன்கள், அவற்றுக்கு தவணைப் பணமும் வட்டியும் கட்டமுடியாமை என்பனவற்றால் நாடு பெரும் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்தது.

அதன் காரணமாக அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதோடு விலைகளும் பல மடங்கு அதிகரித்தன. ஆனால், ராஜபக்ஷ் சகோதரர்களும் அவர்களைச் சார்ந்தவர்களும் லஞ்சம், ஊழல், மோசடி, தரகுப் பணம், அதிகார துஷ்பிரயோகம் என்பனவற்றால் கோடிகோடியாகச் சம்பாதித்தனர்.

இந்த நிலையில் ராஜபக்ஷ் சகோதரர்களுக்கு எதிராக நாட்டின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் வெடித்தன. ஜனாதிபதியின் மீரிஹான வீட்டைச் சுற்றி வளைத்துப் போராட்டம், காலிமுகத்திடலில் "கோத்தா வீட்டுக்குப் போ" போராட்டம், அலரி மாளிகையருகில் "மைனா வீட்டுக்குப் போ" போராட்டம், நாடாளுமன்ற வாசலில் "திருடர்களே வீட்டுக்குப் போங்கள்" என்ற போராட்டம் என மக்களின் போராட்டம் பல்வேறு முனைகளிலும் வெடித்தன.

மே 6ம் திகதி இடம்பெற்ற நாடு பரந்த ஹர்த்தால் போராட்டம் நாட்டை ஸ்தம்பிக்க வைத்ததுடன் அரசாங்கத்தையும் திணறடிக்க வைத்தது. அலரி மாளிகையில் ஒன்று கூடிய மஹிந்தவின் அடியாட்கள் 9ம் திகதி காலிமுகத் திடல் போராட்டக்காரர் மீது தாக்குதலை நடத்தினர். அதனால் மக்கள் பொங்கியெழுந்து எதிர்த்தாக்குதல் தொடுத்த நிலையில் பிரதமர் மஹிந்த ஒழித்து ஓடவேண்டிய நிலை ஏற்பட்டது.

தற்சமயம் திருகோணமலை கடற்படை முகாமில் அடைக்கலம் கோரி அங்கு தங்கியிருந்தார். முள்ளிவாய்க்கால் போர் வெற்றியை ராஜபக்ஷ் சகோதரர்கள் கொண்டாடி நாயகர்களாக வலம் வந்த போது சிங்கள மக்கள் பால் சோறு வழங்கிக் கொண்டாடினார்கள். இன்று அதே சிங்கள மக்கள் முன் வரமுடியாது மறைந்து வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது.

அன்று முள்ளிவாய்க்காலில் உரிமை கோரிப் போராடிய தமிழ் மக்களைக் கொன்று குவித்த அதே ராஜபக்ஷ் சகோதரர்களின் துப்பாக்கி தான் உரிமை கோரிப் போராடும் சிங்கள மக்களை நோக்கியும் நீளுகிறது.

ஒடுக்குமுறையாளர்கள் தங்கள் சொந்த நலன்களுக்காக சாதாரண ஒடுக்கப்படும் மக்களின் ஒரு பகுதியினரைத் தங்கள் பின்னால் அணி திரட்டுவார்கள். பின்பு தேவை வரும் தங்களுக்குப் பின்னால் அணி திரட்டிய மக்களுக்கு எதிராகவே துப்பாக்கியை யத் தாக்குவார்கள்.

தமிழ் மக்களுக்கெதிரான போரின் வெற்றியை பல்சோறு வழங்கிக் கொண்டாடிய அதே சிங்கள மக்களுக்கு எதிராகவே மெதமுலான துப்பாக்கிகள் இன்று தோட்டாக்களை கக்குகின்றன. "ஒரே நாடு, ஒரே மக்கள்", கோஷம் எங்கோ காணாமற் போய்விட்டது.

எனவே முள்ளிவாய்க்கால் நினைவுகள் தமிழ் மக்கள், சிங்கள மக்கள், முஸ்லிம் மக்கள் என சகல ஒடுக்கப்படும் மக்களுக்கும் உரியவை. நாம் அனைவரும் ஒன்றிணையும் போது எம்மை இன, மத அடிப்படையில் பிரித்து எம்மை ஒடுக்கும் அநீதியை உடைத்தெறிய முடியும்.

தமிழர்கள் தமிழர்களாகவும் சிங்களவர்கள் சிங்களவராகவும் முஸ்லிம்கள் முஸ்லிம்களாகவும் ஒன்றிணையும்போது இலங்கையர்களாகச் முன் செல்லமுடியும்.

**நெற்றிபொறியன்**

# சர்வ கட்சி அரசு தமிழ் அரசியலுக்கு சாத்தியமா?



சர்வ கட்சி மகாநாட்டிற்கான ஒரு நடவடிக்கைகள் தற்பொழுது இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றது. ரணில் விக்கிரமசிங்கவினுடைய ராஜதந்திர நகர்வினால் இந்த போராட்டங்கள் ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்டது. ஆனால் தற்பொழுது போராட்டகாரர்கள் பலர் கைது செய்யப்படுகின்றார்கள். காலிமுகத்திடலில் இருக்க கூடிய போராட்ட களங்களை கூட அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதோடு அகற்றுவதற்கான கட்டளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிறப்பித்துள்ளார்.

தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றத்துக்குள்ளே நுழைந்தவர். முதலாவதாக முன்னாள் நிதி அமைச்சராக இருந்த பசில் ராஜபக்ஸ அவர்களை அரங்கில் இருந்து அகற்றினார். இரண்டாவது நகர்வாக பிரதமர் அவர்கள் மஹிந்த ராஜபக்ஸ அவர்களை அகற்றினார். அந்த இடத்திற்கு தான் வந்தார் மூன்றாவதாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியையும் அகற்றினார். அந்த இடத்திற்கு தான் வந்தார். இப்படி வந்த நிலையிலேயே பிரதமாராக இருந்து ஜனாதிபதியாகினார். எனவே அவரது அடுத்த நகர்வாக சர்வ கட்சி ஒன்றை அமைத்து அதனூடாக தனது பிரிந்து சென்ற ஐக்கிய தேசிய கட்சியை பலப்படுத்தி மீண்டும் பாராளுமன்றத்திலேயே ஐக்கிய தேசிய கட்சியை 3/2 பெருபான்மையால் வெல்ல வைத்து ஆட்சி அதிகாரத்தில் இருந்து தான் ஓய்வுபெற வேண்டும் என்பது அவருடைய ஒரு நடவடிக்கையாக காணப்படுகின்றது. அதற்கான நகர்வுகளை தற்பொழுது நகர்த்திக்கொண்டு இருக்கின்றார்.

விடுதலைப்புலிகளியுடைய போராட்டம் மௌனிக்கப்படுவதற்கு முக்கிய காரணமான சூத்திரதாரியாக இருந்தார். 2004ஆம் ஆண்டு காலப்பகுதியிலேயே இடைக்கால நிர்வாகம் வந்த காலப்பகுதியை வைத்து விடுதலைப்புலிகளையும் கருணாவை பிளவுபடுத்தி இந்த போராட்டம் மௌனிக்கபட செய்தவர் என்ற பெருமை அவரைதான் சாரும். விடுதலைப்புலிக்கும் கருணாவிற்கும் இடையிலான பிளவு ஏற்படாமலிந்தால் இன்றும் யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருந்திருக்கும் இல்லையென்றால் தமிழீழம் கிடைக்கப்பெற்றிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. தற்பொழுது அது சர்வதேச ரீதியாக ஒரு அரசியல் போராட்டமாக மாற்றம்பெற்றுள்ளது. தற்பொழுது ஆட்சி மாற்றத்திற்கான போராட்டம் நடைபெற்று மக்கள் போராட்டம் வெடித்து நூற்றுக்கதிகமானோர் காயமடைந்து 10ற்கும் மேற்பட்டவர்கள் இறந்தும் இருக்கின்றார்கள். அதனை விட கோஸ்டி மோதலாக 16க்கும் மேற்ப்பட்டவர்கள் இறந்து இருக்கின்றார்கள். இந்த நிலையிலேயே நாட்டினுடைய பொருளாதாரம் பாரிய பின்னடைவிலேயே சென்ற நிலையில் ஜனாதிபதியாக பதவியேற்ற ரணில் விக்கிரமசிங்ஹ அவர்கள் இறுதித்திட்டமாக அவருடைய அரசியலை தக்க வைத்துக்கொள்கின்ற ஒரு திட்டமாக தான் இந்த சர்வ கட்சிகள் அனைத்தையும் அழைத்து ஒரு பேச்சுக்களை நடத்தி அதிலே தமக்கு சார்ந்தவர்களுக்கான அமைச்சு பதவிகளை கொடுத்து இடைக்கால அரசை நிறுவி அதனூடாக குறிப்பாக மஹிந்த ராஜபக்ஸக்களுடைய சகாக்களை கோட்டபாய ராஜபக்ஸக்களுடைய சகாக்களை இதற்குள்ளே நிறுத்தியதன் ஊடாக அவர் தனது நடவடிக்கையை மேற்கொண்டார்.

சர்வக்கட்சி அரசு மற்றும் சர்வக்கட்சி வேலைத்திட்டம் சம்பந்தமாக அனைத்து கட்சிகளுடனும் ஜனாதிபதி பேச்சுகளை நடத்திவருகின்றார். ஐக்கிய மக்கள் சக்தி, ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உட்பட பிரதான கட்சிகளுடன் முதல் சுற்று பேச்சை வெற்றிகரமாக நிறைவுசெய்துள்ளார்.

தற்பொழுது சர்வக்கட்சி என்கின்ற ஒன்றை அமைக்கும் பொழுது 10தமிழ் கட்சிகளில் 9 தமிழ் கட்சிகள், 04முஸ்லீம் கட்சிகள் தற்பொழுது அதற்கு இணக்கம் தெரிவிப்பதாகவும் உறுதிமொழி ரணில் விக்கிரமசிங்கவிடம் வழங்கியுள்ளார்கள். இதிலே யார் யாருக்கு அமைச்சுப்பதவிகள் வழங்கப்படப்போகின்றது தொடர்பாக தற்பொழுது தென்னிலங்கையிலேயே ஒரு பரப்பரப்பு ஏற்ப்படுத்தப்பட்டிருக்கின்றது.

9 ஆவது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 09 தமிழ்க் கட்சிகளும், 4 முஸ்லிம் கட்சிகளும் சர்வக்கட்சி அரசொன்றை ஸ்தாபிப்பதற்கு ஆதரவை வெளியிட்டுள்ளன. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுதியான நிலைப்பாடு மட்டுமே இன்னும் வெளியாகவில்லை.

அனைத்து அரசியல் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய சபை, நாடாளுமன்ற குழுக்களின் தலைமைப்பதவி உள்ளிட்ட சர்வக்கட்சி வேலைத்திட்டத்துக்கு இரா. சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்கு கூட்டணி, சி.வி. விக்னேஸ்வரன் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, ரவூப் ஹக்கீம் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ரிஷாட் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் என்பன இணக்கம் தெரிவித்துள்ளன. அதேவேளை டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி ( ஈபிடிபி), செந்தில் தொண்டமான் தலைமையிலான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், பிள்ளையான் தலைமையிலான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி, அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸ் என்பன தேசிய அரசின் பங்காளியாவதற்கும் பச்சைக்கொடி காட்டியுள்ளன.

9 ஆவது நாடாளுமன்றத்தில் 10 தமிழ்க் கட்சிகளும், 4 முஸ்லிம் கட்சிகளும் அங்கம் வகிக்கின்றன. (தேர்தல் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள்) இதில் 9 தமிழ்க் கட்சிகளும், நான்கு முஸ்லிம் கட்சிகளும் சர்வக்கட்சி வேலைத்திட்டத்துக்கு இணங்கியுள்ளன.

**1. இலங்கை தமிழரசுக்கட்சி**

**2. தமிழ் ஈழ விடுதலை இயக்கம் – ரெலோ**

**3. தமிழ் மக்கள் விடுதலைக் கழகம் – புளொட்**

**(தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு)**

**4. ஜனநாயக மக்கள் முன்னணி**

**5. மலையக மக்கள் முன்னணி**

**6. தொழிலாள் தேசிய முன்னணி**

**(தமிழ் முற்போக்கு கூட்டணி)**

**7.ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி – ஈபிடிபி**

**8. தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி**

**9. இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ்**

**1.ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ்**

**2.அகில இலங்கை மக்கள் காங்கிரஸ்**

**3. தேசிய காங்கிரஸ்**

**4.முஸ்லிம் தேசியக் கூட்டணி**

9 ஆவது நாடாளுமன்றத்தில் மக்கள் வாக்களிப்பு மற்றும் தேசிய பட்டியல் ஊடாக தெரிவாகிய 28 தமிழ் எம்.பிக்களும், 20 முஸ்லிம் எம்.பிக்களும் அங்கம் வகிக்கின்றனர். நாடாளுமன்ற தேர்தலில் சொந்த சின்னத்தில் போட்டியிட்டு , நாடாளுமன்ற பிரதிநிதித்துவம் வென்ற கட்சிகளின் எண்ணிக்கை 14. ( அதாவது நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கட்சிகள்)பல தமிழ்க் கட்சிகள் பிரதான கட்சிகளுடன் கூட்டணி அமைத்தே போட்டியிட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

அதே நேரம் இந்த சர்வ கட்சி ஊடாக சர்வதேச நாடுகளின் நிலைப்பாடுகள் சர்வ கட்சியினை அமைப்பதற்கு தமது ஆதரவினை தருவதாகவே வலியுறுத்தி இருக்கின்றார்கள்.அதே கட்டத்தலேயே இந்த சூழலை பயன்படுத்தி சர்வ கட்சியை அமைத்து. இந்த சர்வ கட்சியினூடாக பாரிய ஒரு திருப்பு முனையை ஏற்படுத்துவது தான் ஜனாதிபதி ரணில் விக்கிமசிங்கவின் முக்கிய நோக்கமாக இருக்கின்றது. இதிலே குறிப்பாக பார்க்கின்ற பொழுது மஹிந்த ராஜபக்ஸக்களின் குடும்ப அரசியல் இடம்பெறக்கூடாது என்பதில் ரணில் விக்கிரமிங்க அவர்கள் தெளிவாக செயற்படுகின்றார்.

எது எவ்வாறாக இருப்பினும் சர்வ கட்சி அமைப்பதன் ஊடாக சரி தமிழ் மக்களுக்கான தீர்வானது கிடைக்கப்பெறுமா என்று பார்த்தால் அதுவும் கேள்வி குறியாகவே காணப்படுகின்றது. ஏனென்றால் வடகிழக்கினுடைய பிரச்சனையான தமிழ் மக்களுக்கான தீர்வு எட்டப்படுமா? என்று பார்த்தால் அது வெறும் சொற்களினாலான பேச்சுக்களாகவே தற்பொழுதும் அமையப்பெற்றிருக்கின்றது. தமிழ் மக்களுடைய அரசில் கைதிகளுக்கான விடுதலை தொடர்பாக கூறியிருக்கின்றார், தமிழ் மக்களுக்கான தீர்வு திட்டம் ஒன்றை வழங்கும் நிலைப்பாட்டுக்கு முன்வந்துள்ளார். இவை அனைத்துமே தனது ராஜதந்திர நகர்வுகளை நகர்த்துவதற்காகவும் தனது தலைமையிலான சர்வ கட்சி தலைமை கட்டியெழுப்பட வேண்டும் என்பதற்காகவே அவர் முன்னின்று செயற்படுகின்றார். 2024ஆம் ஆண்டு நிறைவடைய இருக்கின்ற ஜனாதிபதியினுடைய பதவியை இருக்கும் வரை தக்கவைத்து கொள்ள வேண்டும் என்பதிலேயே அவர் மாற்றுக்கருத்து இல்லாதவராக இந்த சர்வ கட்சியை அமைக்கின்றார்.

எந்த போராட்டங்கள் நடைபெற்று அதனூடாக ஆட்சிக்கு வந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தற்பொழுது அதே போராட்டங்களை நிறுத்துமாறும் அந்த போராட்டங்களில் ஈடுபட்டவர்களை கைது செய்யுமாறு கூறிவருகின்றார். கோட்டா கோ கம என கூறியவர்கள் தற்பொழுது ரணில் கோ கம என கூறுவதை காண முடிகின்றது. தற்பொழுது காலி முகத்திடல் போராட்டத்திற்கு முக்கிமாக ஈடுப்பட்டவர்கள்,தனது வீட்டிற்கு தீ வைத்தவர்கள், ஜனாதிபதி மாளிகையில் வன்றையில் ஈடுப்பட்டவர்கள் என தற்பொழுது தனி தனியாக விசாரணை செய்யும் உத்தரவை கொடுத்திருக்கின்றார்.

எது எவ்வாறாக இருப்பினும் நாடும் நாட்டு மக்களும் எதிர்கொண்டு வந்த பொருளாதார பிரச்சனைக்கான தீர்வானது முழுமையாக கிடைக்கப்பெறவில்லை என்றாலும் அதனுடைய ஆரம்ப தீர்வுகள் முன்னோக்கி செல்வதை பார்க்க கூடியதாக இருக்கின்றது எனலாம். எரிபொருள், எரிவாயு ஆகியவற்றை பெற்றுக்கொள்வதில் இருந்த சிக்கல் நிலைக்கான தீர்வுகள், அத்தியாவசிய பொருட்கள் போன்றவற்றின் விலை மாற்றங்கள் போன்ற மக்களை தற்பொழுது அமைதியடை செய்திருக்கின்றது என்றாலும் இவை நீடிக்குமா? இல்லையென்றால் திரும்பவும் மக்கள் புரட்சி வெடிக்குமா? வரவிருக்கின்ற சர்வ கட்சி அரசு எந்தளவிற்கு மக்கள் விரும்பும் ஆட்சியினை கொடுக்கும் என்பது காலம் தான் பதிலாக இருக்கப்போகின்றது.

ஆகவே இக்கட்டான சூழ்நிலையில் ரணில் விக்கிரமசிங்கசை தவிர வேறு யாராலும் காப்பாற்ற முடியாது என்கின்ற நிலைப்பாடு சர்வதேச ரீதியாகவும் இருந்து அதனை சாதாகமாக பயன்படுத்திக்கொண்ட ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தற்பொழுது அவர் நாட்டின் 8வது ஜனாதிபதியாக இந்த அரங்கத்திலேயே தற்பொழுது இணைந்துள்ளார். அத்துடன் சர்வ கட்சி அமைப்பதன் ஊடாக அவரது அடுத்த கட்ட நகர்வினை மேற்கொள்கின்றார் எனலாம்.

**நெற்றிபொறியன்**



# பிராந்திய செய்திகள்



## உணவுப் பொதி, தேனீர் விலையில் மாற்றம்

சீனி உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை குறைப்புடன், உணவுப் பொதி மற்றும் தேனீர் கோப்பை ஒன்றின் விலையையும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், பேலியகொடை மத்திய வர்த்தக நிலையத்தின் மரக்கறிகள், பழங்கள் மற்றும் மீன்களின் விலைகள் கடந்த நாட்களை விட அன்று (06) அதிகரித்துள்ளதாக விற்பனை நிலைய உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

மரக்கறிகளை கொண்டு செல்வதற்கு தேவையான எரிபொருளை பெற்றுக்கொள்வதில் சிரமம் மற்றும் நிலவும் மழையுடனான காலநிலை காரணமாக விலையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும் கடந்த தினங்களை விட இன்று பேலியகொட மெனிங் சந்தைக்கு வரும் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.


இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாடு சிறிதளவு குறைந்துள்ளதாலும், தொடர்ச்சியாக பொருட்கள் மொத்தமாக கிடைப்பதாலும் கோட்டை மற்றும் நாரஹேன்பிட்டி மொத்த விற்பனை நிலையங்களில் இறக்குமதி செய்யப்படும் உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம், சிவப்பு வெங்காயம், பருப்பு போன்றவற்றின் விலைகள் சிறிதளவு குறைந்துள்ளதை அவதானிக்க முடிந்தது.

இதற்கிடையில் எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக பேலியகொட மத்திய மீன் சந்தைக்கு மீன் வரத்து குறைந்துள்ளதுடன், இதன் காரணமாக மீன்களின் விலையும் மிக உயர்ந்த மட்டத்தில் காணப்படுகின்றது.

இதேவேளை, எதிர்வரும் திங்கட்கிழமை (08) நள்ளிரவு முதல் 12.5 கிலோ கிராம் வீட்டு எரிவாயு சிலிண்டரின் விலை சுமார் 200 ருபாவினால் குறைக்கப்படும் என லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், இலங்கையின் உத்தியோகபூர்வ வெளிநாட்டு சொத்து கையிருப்பு 2022 ஜூன் மாதத்தில் காணப்பட்டதில் இருந்து ஜூலை மாதத்தில் 2.1% ஆல் குறைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜூன் மாதத்தில் 1.854 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த வெளிநாட்டு சொத்து கையிருப்பு ஜூலையில் 1.815 மில்லியன் அமெரிக்க டொலர்களாக குறைந்துள்ளது.



## மகளை கண்டித்த தந்தையின் மண்டையை உடைத்த தாய்!

யாழ் உரும்பிராய் கிழக்கில் மகளை கண்டித்த தந்தையை, தாய் தாக்கியதில் காயமடைந்த தந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் அன்று(05.05) இடம்பெற்றுள்ளது..

மகள் தொலைபேசியில் அதிக நேரத்தை செலவிடுவதாக தந்தை கண்டித்துள்ளதுடன், மகளிடமிருந்த தொலைபேசியை வாங்கிய தந்தை அதிலிருக்கும் விடயங்களை பார்வையிட்டுள்ளார். இதனால் உருவான வாய்த்தர்க்கம் மோதலாக மாறிய நிலையில் மகளின் முன்னால் தந்தையை தாக்கிய தாய் மண்டையை உடைத்துள்ளார்.

இதில் காயமடைந்த தந்தை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளர்ர்.



## எரிபொருள் விநியோகத்திற்கு புதிய நிறுவனம்?

பெற்றோலிய உற்பத்தி, இறக்குமதி, விநியோகம் மற்றும் விற்பனைக்கு பொருத்தமான நிறுவனங்களை மதிப்பிடுவதற்கு குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இது தொடர்பான குழு நேற்று நியமிக்கப்பட்டதாக அமைச்சர் டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி, எதிர்காலத்தில் சிபெட்கோ மற்றும் லங்கா ஐ.ஓ.சி ஆகிய நிறுவனங்களுடன் இலங்கையின் பெற்றோலியத் தொழிலில் ஈடுபட பல நிறுவனங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும் என அமைச்சர் டுவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## பொது மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு

வெள்ளம் மற்றும் மண்சரிவு போன்ற இயற்கை அனர்த்தங்கள் தொடர்பில் விடுக்கப்படும் ஆலோசனைகளை முறையாக கடைப்பிடிக்குமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் பொது மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

அனர்த்தங்கள் நிகழுமாயின் அதுபற்றி துரித தொலை பேசி இலக்கத்தின் ஊடாக நிலையத்திற்கு அறிவிக்குமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

துரித தொலைபேசி இலக்கம் 117 என்பதாகும்.

10 மாவட்டங்களைச் சேரந்த 65 கிராம உத்தியோகத்தர்பிரிவுகள்சீரற்றகாலநிலையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் குறிப்பிட்டுள்ளது.



## அளவை நிறுவையில் இடம்பெற்று வருகின்ற மோசடிகளை தடுக்கும் நோக்கில் பொதுச் சந்தையில் பொதுமக்கள் பாவனைக்கு தராசு!




அளவை நிறுவையில் இடம்பெற்று வருகின்ற மோசடிகளை தடுக்கும் நோக்கில் சம்மாந்துறை பிரதேச சபையினால் நிறுவையினை சரிபார்க்கும் தராசு சம்மாந்துறை பொதுச் சந்தையில் பொருத்தப்பட்டுள்ளதாக தவிசாளர் ஏ.எம்.எம். நௌஷாட் தெரிவித்தார்.

பொதுமக்கள் வியாபாரிகளிடம் கொள்வனவு செய்கின்ற பொருட்களின் சரியான அளவு நிறுவைகளை பயனாளர்கள் இதன் மூலம் சரிபார்த்து உறுதி செய்து கொள்வதற்காகவும், இவ்வாறு சரியான அளவு நிறுவைகளை சரிபார்ப்பதனால் வியாபாரிகள் செய்கின்ற மோசடிகளை அல்லது செய்ய முனைகின்ற செயற்பாடுகள் தடுக்கப்படும் என்றும் அவ்வாறு மோசடிகள் இடம்பெறுமாக இருந்தால் பொதுமக்கள் தங்களின் முறைப்பாடுகளை 1977, 067 2260043 என்ற இலக்கங்களை தொடர்பு கொண்டு தெரிவிக்க முடியும் என்று தவிசாளர் பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளார்.

இன்றைய பொருளாதார நெருக்கடிக்குள் மக்கள் கஷ்டப்படுகின்ற இந்நிலைமையில் அவர்களின் வாழ்வாதார சுமைகளை மிகக் கஸ்டத்துக்கு மத்தில் சுமந்து வருகின்றனர். அதிலும் சில வியாபாரிகள் அவர்களின் கொள்வனவுப் பொருட்களில் மோசடி செய்கின்றனர். இதனைத் தடுக்கும் நோக்கிலேயே இந்த தராசை பொதுச் சந்தையில் பொருத்த நடவடிக்கை எடுத்தோம் என தவிசாளர் ஏ.எம்.எம்.நௌஷாட் சுட்டிக்காட்டினார்.

## கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் கரை ஒதுங்கிய சடலம்

வத்தளை, திக்கோவிட்ட கடற்கரையில் இனந்தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் குறித்த சடலம் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. உயிரிழந்தவர் 35 - 40 வயதுடையவர் என நம்பப்படுகிறது.

## அத்தியாவசிய பொருட்களின் விலை மேலும் குறைவடையும் - அமைச்சர்

பருப்பு போன்ற பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் 20% முதல் 25% வரை குறைக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.



திறந்த கணக்குகள் மூலம் அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்வதற்கு மத்திய வங்கி அனுமதி வழங்கியதை தொடர்ந்து அத்தியாவசிய உணவுப் பொருட்களின் தட்டுப்பாடு பாரியளவில் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் மேலும் குறைக்கப்படும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார். 1 கிலோ பருப்பின் விலை சுமார் 150 ருபாவால் குறைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.



# சினிமா துளிகள்



## இனிமே இப்படித்தான்.. சமந்தா எடுத்த அதிரடி முடிவு



சமந்தா தற்போது தெலுங்கு படங்கள் தான் கைவசம் வைத்து இருக்கிறார். அதில் சில தமிழிலும் வெளியாக இருக்கும் பைலிங்குவல் படங்கள் தான்.

அடுத்து சமந்தா எப்போது நேரடி தமிழ் படங்கள் நடிப்பார் என ரசிகர்கள் எதிர்பார்த்து காத்திருக்கும் நிலையில், அதற்கு தற்போதைக்கு வாய்ப்பு இல்லை.. அவர் அடுத்து மூன்று பாலிவுட் படங்களில் பிசியாக இருக்கிறார் என தகவல் வெளியாகி இருக்கிறது.

## நடிகை ஹன்சிகாவிற்கு திருமணம்.. மாப்பிள்ளை யார் தெரியுமா



ரசிகர்களின் மனதை கட்டிப்போட்ட தமிழ் சினிமா கதாநாயகிகளில் ஒருவர் ஹன்சிகா. இவர் நடிப்பில் சமீபத்தில் மஹா திரைப்படம் வெளிவந்தது.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஹன்சிகாவின் 50வது திரைப்படமான மஹா தோல்வியை தழுவியுள்ளது. மஹா திரைப்படத்தில் ஹன்சிகாவுடன் இணைந்து நடிகரும், ஹன்சிகாவின் முன்னாள் காதலருமான சிம்பு நடித்திருந்தார்.

சிம்பு மற்றும் ஹன்சிகாவின் காதல், திருமண பேச்சு வரை சென்று நின்றுபோனது. இதன்பின், ஹன்சிகாவின் திருமணம் குறித்து எந்த ஒரு தகவலும் வெளிவரவில்லை.

இந்நிலையில், நடிகை ஹன்சிகா விரைவில் திருமணம் செய்துகொள்ள போகிறாராம். பிரபல அரசியல்வாதியின் மகனை தான், நடிகை ஹன்சிகா திருமணம் செய்துகொள்ள போவதாக திரை வட்டாரத்தில் பேச்சு அடிபடுகிறது.

ஆனால், மாப்பிள்ளையின் பெயர் இதுவரை வெளிவரவில்லை. விரைவில் நிச்சயதார்த்தம் நடைபெற போவதாகவும் தகவல் கூறுகின்றனர்.

ஆனால், இதுகுறித்து ஹன்சிகா இதுவரை எந்த ஒரு அறிவிப்பையும் வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## டிக்கெட் விற்பனையில் விக்ரம் படம் இப்படி ஒரு சாதனை செய்துள்ளதா?

இளம் இயக்குனர் லோகேஷ் மாநகரம், கைதி, மாஸ்டர் படத்தை தொடர்ந்து இயக்கிய திரைப்படம் விக்ரம். கமல்ஹாசனுடன் முதன்முறையாக கூட்டணி அமைத்து அவர் இயக்கிய இப்படம் மாபெரும் வெற்றியை பெற்றது.

கமல்ஹாசன் நடிப்பில் சில வருடங்களுக்கு பிறகு படம் வெளியாவதால் ரசிகர்கள் பெரிய வரவேற்பு கொடுத்தார்கள். ரூ. 420 கோடி வரை மொத்தமாக வசூலித்துள்ள இப்படம் நிறைய பாக்ஸ் ஆபிஸ் சாதனைகளை செய்திருக்கிறது.

படம் செய்த சாதனை

தற்போது விக்ரம் படம் குறித்து அண்மையில் கமல்ஹாசன் பேசியுள்ளார். அதில் அவர் பேசும்போது, விக்ரம் படம் தமிழகத்தில் ஆல்டைட் ரெக்கார்ட் ஒன்று செய்துள்ளது.

இதுவரை தமிழகத்தில் மட்டுமே 1.5 கோடிக்கு மேல் டிக்கெட் புக்கிங் செய்யப்பட்டு பெரிய சாதனை செய்துள்ளது என்று தெரிவித்திருக்கிறார்.



## கீர்த்தி சுரேஸ்க்கு விரைவில் திருமணம்?

நடிகை கீர்த்தி சுரேஷ் தற்போது தென்னிந்திய சினிமாவில் முக்கிய நடிகையாக இருக்கிறார். அவருக்கு விரைவில் திருமணம் என தகவல் பரவி வருகிறது.

கீர்த்தி சுரேஷ் தொடர்ந்து முன்னணி ஹீரோக்கள் படங்களில் நடித்து வருகிறார். அது மட்டுமின்றி அவர் ஹீரோயின் centric படங்களிலும் தேர்ந்தெடுத்து நடித்து வருகிறார்.


தற்போது உதயநிதி ஸ்டாலின் ஜோடியாக மாமன்னன் படத்தில் அவர் நடித்து வருகிறார்.

இந்நிலையில் கீர்த்தி சுரேஷ் திருமணத்திற்கு சம்மதித்துவிட்டார் எனவும், விரைவில் பெற்றோர் பார்த்த மாப்பிள்ளையை திருமணம் செய்ய இருக்கிறார் எனவும் தகவல் வெளியாகி இருக்கிறது.

மாப்பிள்ளை ஒரு தொழிலதிபர் என்றும், அரசியலிலும் ஈடுபட்டு வருகிறார் எனவும் கூறப்படுகிறது. இந்த தகவல் உண்மையாக இருந்தால் விரைவில் திருமணம் பற்றிய அதிகாரபூர்வ அறிவிப்பு வரும் என எதிர்பார்க்கலாம்.



# கொரோனா வைரசின் தாக்கம் – கட்டுப்படுத்தும் முறைகள்



புதிய கொரோனா வைரசினால் உருவாகியுள்ள உலகளாவிய நோய் தொற்று காரணமாக முன்னொருபோதும் ஏற்பட்டிராத அழிவுகள் குறித்து வெளிவரும் பிழையான தகவல்கள் மோசமான ஆபத்துக்களை ஏற்படுத்தலாம். இது தொற்றுநோய் கொள்கை முயற்சிகள் மற்றும் நாம் எவ்வாறு பங்களிக்க முடியும் என்பதற்கான ஏழு வழிமுறைகள் அடங்கிய சுருக்கமான வழிக்காட்டுதலாகும்.

**கொவிட் 19 என்றால் என்ன?**

இது கொரோனா வைரஸின் ஒரு புதிய வடிவம் - பொதுவாக சளியையும் அதனை விட பாரதூரமான நோய்களையும் உருவாக்ககூடிய பாரிய வைரஸ் குழுவே இவ்வாறு அழைக்கப்படுகின்றது.

2003 இன் சார்ஸ் வைரஸீம் (Severe Acute Respiratory Syndrome) 2012 இன் மேர்சும் (Middle East Respiratory Syndrome) கொரோனா வைரஸின் வெவ்வேறு வடிவங்களால் உருவானவையே.

இந்த வைரஸ் குறித்த அனைத்து தகவல்களும் தெரியவரவில்லை என்பதை நினைவில் வைக்க வேண்டியது முக்கியமான விடயமாகும். எதிர்காலத்தில் புதிய தகவல்கள் தெரியவரலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது என்பதையும் நாங்கள் கருத்தில் கொள்ளவேண்டும்.

கொரோனா வைரஸ், உத்தியோகபூர்வமாக பெயரிடப்பட்ட COVID-19 முதன் முதலில் சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டதுடன் தற்போது உலகளாவிய நோய் தொற்றாக மாறியுள்ளது.

**தொற்றுநோய் – உலகளாவிய தொற்று என்றால் என்ன?**

குறிப்பிட்ட சனத்தொகையினர் மத்தியில் எதிர்பார்த்த அளவினை விட திடீர் என அதிகளவு நோய் தாக்கம் காணப்படுவதே தொற்றுநோய் என அழைக்கப்படுகின்றது. உலகளாவிய தொற்று என்பது பல நாடுகளில் கண்டங்களில் பரவியுள்ள மிகப்பெருமளவானவர்களை தாக்கும் நோயை குறிக்கும்.

உதாரணத்திற்கு மேர்ஸ், சார்ஸ் ஆகிய இரண்டும் பிராந்திய அளவில் மட்டுப்படுத்தப்பட்ட தாக்கத்தினை ஏற்படுத்தியதால் தொற்றுநோய்கள் என அழைக்கப்படுகின்றன. அதேவேளை கொரோனா வைரஸ் அதன் உலகளாவிய தாக்கம் காரணமாக உலகளாவிய நோய் தொற்று என உலக சுகாதார ஸ்தாபனம் என அறிவித்துள்ளது.

தொற்றுநோய், உலகலாவிய தொற்றுநோய் மற்றும் நோய் பரவுவது குறித்த பல விடயங்களை இங்கே பார்க்கலாம்.

**உங்களை எப்படி பாதுகாப்பது?**

கொவிட் 19 சுவாசத்துளிகள் மூலமாக பரவுகின்றது. கைகுலுக்குதல், கட்டித்தழுவுதல் போன்ற நெருக்கமான தொடர்புகள் மூலமும் , இருமல், தும்மல் போன்றவற்றின் மூலமும் இது பரவுகின்றது.

நாங்கள் பயன்படுத்தக்கூடிய இலகுவான நடைமுறைகளை உலக சுகாதார ஸ்தாபனம் வெளியிட்டுள்ளது. அவை பின்வருமாறு:

உங்கள் கைகளை அடிக்கடி சுத்தம் செய்யுங்கள் அல்லது கைகள் கழுவுவதற்காக உள்ள அல்கஹோல் கலந்த திரவத்தைப் பயன்படுத்தி கிருமிகளை கொல்லுங்கள். உங்கள் தனிப்பட்ட பொருட்களை (கையடக்கத் தொலைப்பேசி) அடிக்கடி சுத்தம் செய்யுங்கள்.

உங்கள் பழக்கவழக்கங்கள் குறித்து அவதானமாக இருங்கள். உங்கள் முகத்தினை கைகளினால் தொடுவதை தவிர்த்துக்கொள்ளுங்கள் (கண், மூக்கு, வாய்). இருமும் போது அல்லது தும்மும்போது உங்கள் முகத்தினையும் வாயையும் கையால் மூடிக்கொள்வதற்கு பழகிக்கொள்ளுங்கள். (அல்லது டிசுவினால் மூடிய பின்னர் அதனை உடனடியாக குப்பையில் போடுங்கள்.

சமூக விலக்கல்களை (social distancing) பின்பற்றுங்கள். (உலக சுகாதார ஸ்தாபனம் ஒரு மீற்றர் அல்லது 3 அடியை பரிந்துரை செய்துள்ளது.) குறிப்பாக இருமும், தும்மும் நபரிடமிருந்து சமூக விலக்கல்களை மேற்கொள்ளுங்கள்.

உங்களுக்கு இருமல் , சளி , சுவாசிப்பதில் பிரச்சினைகள் போன்றவை இருப்பதாக நீங்கள் நினைத்தால் இலங்கை சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களை பின்பற்றுங்கள். 1999 இலக்கத்தின் மூலம் இலங்கை சுகாதார மேம்பாட்டு பணியகத்தினை தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். எந்த வலையமைப்பிலிருந்தும் அதனை அணுகலாம்.

இந்த நடவடிக்கைகளை நீங்கள் பின்பற்றினால் நோய் பரவுவதைத் தடுப்பதற்கு அல்லது நோயைக் குறைப்பதற்கு உதவுவீர்கள்.

**சர்வதேச மற்றும் உள்நாட்டு வழிகாட்டுதலின் அடிப்படையில் – கொரோன வைரஸினை கட்டுப்படுத்துவதற்காக நாங்கள் பரிசிலீக்கக் கூடிய ஏழு நடவடிக்கைகள் பின்வருமாறு:**

**சுகாதார வழிகாட்டுதல்களை பின்பற்றுதல்** (#Followhealthguidelines)

நபர் என்ற அடிப்படையில் நீங்கள் சமூக தனிமைப்படுத்துதல், சுகாதார நடைமுறைகள், உங்களினதும் உங்களின் அன்புக்குரியவர்களினதும் உடல்நலத்தை கண்காணித்தல் குறித்த உள்நாட்டு வெளிநாட்டு வழிகாட்டுதல்களை பின்பற்றுங்கள்.

**தொலைவிலிருந்து பணிபுரிதல்** (#workremotely)

நீங்கள் ஒரு நிறுவனத்தைச் சேர்ந்தவர் என்றால், தொலைவிலிருந்து அதனை நிர்வகிக்க முடியுமென்றால் தயவுசெய்து அவர்கள் தொலைவிலிருந்து பணிபுரிவதற்கு அனுமதியுங்கள். இரண்டு வாரங்களுக்கு சம்பளத்துடன் விடுமுறையையை வழங்குங்கள்.




**பொதுநிகழ்வுகளை இரத்துச்செய்யுங்கள்** (#cancelgatherings)

நீங்கள் BigMatch, கூட்டம், பெருமளவானவர்கள் கூடும் நிகழ்வு ஆகியவற்றின் ஏற்பாட்டாளர்கள் என்றால் பொது மக்களின் சுகாதார நலனை அடிப்படையாகக் கொண்டு அவற்றினை இரத்துச்செய்யுங்கள். உங்களால் கொரோனா வைரஸிடன் மோத முடியாது, நீங்கள் ஏனையவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துவீர்கள்.

**கொவிட்-19 குறிக்க பிழையான செய்திகளுக்கு எதிராகப் போராடுங்கள்** (#fightCOVIDmisinformation)

நீங்கள் சமூக ஊடங்களில் செல்வாக்கு செலுத்துபவர் என்றால், பத்திரிகையாளர் என்றால், நீங்கள் பகிர்ந்து கொள்பவைகள் மற்றும் உங்கள் தகவல்கள் குறித்து பொறுப்புணர்வுடன் இருங்கள். இதனை செய்வதற்கு நீங்கள் உத்தியோகபூர்வ செய்திகளை ஆராயலாம்.

உங்கள் டுவிட்கள், கட்டுரைகள், பதிவுகள் போன்றவற்றில் காணப்படும் தகவல் மூலங்கள் குறித்து ஆராயுங்கள். முன்னைய பதிவுகளின் மேலதிக தகவல்களை ஆராயுங்கள். ஆதாரமற்ற கொள்கைகளுக்காக குரல்கொடுக்காதீர்கள். அரசாங்க சுகாதார உத்தியோகத்தர்களுடன் முரண்படாதீர்கள். முரண்படவேண்டும் என்பதற்காக முரண்படாதீர்கள். சரியான விடயங்களை உள்ளடக்காத டுவிட் அல்லது கட்டுரைகளால் இடர் மிகுந்த தருணங்களில் நீங்கள் நினைப்பதை விட மிகுந்த பாதிப்பை ஏற்படுத்த முடியும்.

**கொவிட் கொள்கைகளை தெளிவுபடுத்துங்கள்** (#explainCOVIDpolicies)

விடுமுறைகள், அலுவலகங்களை மூடுதல் போன்ற எங்களால் பொது சுகாதார கொள்கைகள் குறித்து தெளிவுபடுத்துவது அவசியம். உதாரணத்திற்கு இலங்கையில் தேசிய விடுமுறைக்கான காரணத்தை வைத்தியர் பிரசன்ன குணசேனவும், போக்குவரத்து தடைகள் ஏன் பலனளிக்காது என கனடாவின் சுகாதார அமைச்சர் படி ஹட்சுவும் தெளிவுபடுத்துவதை இங்கே பார்க்கலாம்.

**கொவிட் – உளநலம்** (#COVIDmentalhealthcare)

இதுபதற்றமானநிச்சயமற்றநேரம். எங்களைசமூகரீதியில் தனிமைப்படுத்துமாறு ஆலோசனை வழங்கியுள்ளனர். பதற்றத்தை குறைப்பதற்கான வழிமுறைகள் மூலம் எங்களினதும் ஏனையவர்களினதும் உளநலம் குறித்து ஆராய்வது சிறந்த விடயமாகும். தனித்து வாழ்பவர்கள் அல்லது ஆதரவுள்ளவர்களை உங்களுக்குத் தெரிந்திருந்தால் அவர்களது உளநலத்திற்கு ஒரு தொலைபேசி அழைப்பு அல்லது குறுஞ்செய்தி சிறந்ததாக அமையும். முதிய உறவினர்கள், உட்பட உங்கள் உறவினர்களை நண்பர்களை உங்களுக்கு தெரியும் என்றால் அவர்களுக்குப் பொருட்களை வாங்கிக்கொடுப்பதன் மூலம் உதவுங்கள்.

**கொவிட்டின் போது இரக்கத்துடன் காணப்படுங்கள்**

இது சர்வதேச தரத்திலான நெருக்கடி. எங்களிடம் அனைத்து விடைகளும் இல்லை. இணைந்து செயற்படுவதன் மூலமும் ஒருவருக்கொருவர் இரக்கத்துடன் இருப்பதன் மூலமும் இதனை வெற்றிகொள்ள முடியும். இரக்கமாகயிருப்பது என்பது சிறந்த சுகாதார நடைமுறைகளை பின்பற்றுவது. தவறான தகவல்களை உருவாக்காமலிருப்பது. நோயாளிகளாக இருக்கக்கூடியவர்களை தாக்காமலிருப்பது. ஒருக்கொருவர் பாரபட்சம் காட்டாமலிருப்பது. ஏனையவர்களை புறக்கணிக்காமலிருப்பது. ஏனையவர்களின் உளநலம் குறித்து அறிந்திருப்பதாகும். இந்த பட்டியல் முழுமையானது இல்லை. இது ஒரு ஆரம்பமே.

**தொகுப்பு**

04ஆம் பக்க தொடர்ச்சி...

ஏனெனில் ஒவ்வொரு தாக்கத்திற்கும் எதிர்த்தாக்கம் இருக்குமென்பது விஞ்ஞானி நியூட்டன் அவர்களின் மாற்றமுடியாத விதியாகும். மக்களுக்காக மக்களால் தெரிவு செய்யப்படும் மக்களாட்சி என்பதே ஜனநாயகக் கோட்பாடு". இது ஜனநாயகம் தொடர்பாக உலகெங்குமுள்ள அரசியல் கோட்பாட்டாளர்களால் வழங்கப்படும் விளக்கமாகும். எல்லா ஜனநாயக நாடுகளிலும் மக்களால் தெரிவு செய்யப்படும் ஆட்சி என்பது உண்மைதான். ஆனால் பல நாடுகளில் அவை மக்களுக்கான மக்களாட்சியாக விளங்குகிறதா என்பது கேள்விக்குரிய விடயமே. மக்களால் தெரிவு செய்யப்படுவது என்பதில் கூட மக்களின் அதிகாரம் ஒரு வரையறைக்குட்பட்ட விதத்திலேயே பிரயோகிக்க அனுமதிக்கப்படுகிறது.

ஜனநாயகத்தில் ஆட்சியதிகாரத்தை உருவாக்கும் வழிமுறை என்பது தேர்தலாகவே காணப்படுகிறது. தேர்தலுக்கான வேட்பாளர்களை அரசியல் கட்சிகளே தெரிவு செய்கின்றன. சில வேட்பாளர்கள் சுயேட்சையாகப் போட்டியிட்டாலும் அவர்கள் பின்னால் அவர்களை வழிநடத்தும் அல்லது சில குழுக்களாலோ இருக்கும். ஒரு சில வேட்பாளர்களில் ஒருவரை மட்டுமே தெரிவு செய்ய வேண்டும். இப்படி வேட்பாளர்களாக நியமிக்கப்படுபவர்கள்கூட தேர்தலுக்காகப் பெருமளவு செலவு செய்யக்கூடியளவு பணம் படைத்தவர்களாக இருக்க வேண்டும். அதிலும் இலங்கையைப் பொறுத்த வரையில் மாவட்ட ரீதியான விகிதாசார தேர்தல் என்பதால் வேட்பாளர் மாவட்டம் முழுவதும் தேர்தல் செலவுகளை மேற்கொள்ளக்கூடியளவு பண வசதி படைத்தவராக இருக்கவேண்டும். அவ்வகையில் தாங்கள் சொந்த நலன்களைப் பின் தள்ளி மக்களுக்குப் பணியாற்றும் அர்ப்பண உணர்வு கொண்ட நேர்மைசாலிகள் வேட்பாளர்களாகத் தெரிவு செய்யப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகிறது.

எனவே மக்கள் தாம் விரும்பும் ஆட்சியாளர்களைத் தெரிவு செய்வது என்பது கட்சிகளால் நியமிக்கப்படும் ஒரு சிலருக்குள்ளேயே தங்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யமுடியும் என்றளவுக்கு மக்களின் அதிகாரம் மட்டுப்படுத்தப்படுகிறது. அதேபோன்று ஆட்சி செய்பவர்களும் அவர்களில் பெரும்பான்மையைப் பெறும் கட்சியினரேயாவர். அக்கட்சியிலும் ஆட்சியதிகாரம் பிரதமரினதும் அமைச்சரவையினதும் கைகளிலேயே இருக்கும். ஆனால் இலங்கையிலோ ஆட்சியதிகாரம் என்பது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி கைகளிலேயே குவிக்கப்பட்டுள்ளது.

எனவே மக்களால் தெரிவு செய்யப்படும் மக்களுக்கான மக்களாட்சி என்ற கோட்பாடு எவ்வளவு போலியானது என்பதைப் புரிந்து கொள்ளமுடியும்.

எனவே மக்களுக்கான ஆட்சி என்பது ஆட்சிக்காகவே மக்கள் என்பதையும். அந்த ஆட்சி என்பது வசதி படைத்தவர்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டது என்பதையும் மூடி மறைக்கும் ஒரு அழகான மூடுதிரையாகும்.

இன்று இலங்கையில் நடந்துகொண்டிருக்கும் சம்பவங்கள் இந்த உண்மையைத் தெளிவாகவே புலப்படுத்துகின்றன.

அரிசி, கோதுமை, பால்மா, சீனி, பருப்பு உட்பட அத்தியாவசியத் தேவைப்பொருட்கள் மக்களால் வாங்க முடியாதளவுக்கு விலையுயர்த்தப்பட்டுள்ளன. எரிபொருட்கள், எரிவாயு என்பவற்றின் விலைகள் அடிக்கடி அதிகரிக்கப்படுவதுடன் அவற்றைப் பெற்றுக்கொள்ள நாட்கணக்கில் நீண்ட வரிசையில் காத்திருக்கவேண்டியுள்ளது. அந்நியச்செலாவணிக் கையிருப்பு இல்லாமையே இதற்குக் காரணமெனக் கூறப்படுகிறது.

எனவே மக்களுக்கான அரசாங்கம் என்பது இங்கே பொய்யாகிப் போய்விட்டது. அரசாங்கம் மக்களை வருத்துவதன் மூலம் தனது இருப்பைப் பாதுகாத்துக்கொள்கிறது. அதாவது அரசாங்கத்துக்காக மக்கள் என்ற நிலை உறுதியாகி விட்டது.

எனவே தான் அரசாங்கம் மக்களின் அத்தியாவசியத் தேவைகளைக் குறைந்த பட்சமாவது நிறைவேற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். அரசாங்கத்துக்காகவே மக்கள். மக்களுக்காக அரசாங்கம் அல்ல என்பது மக்கள் உதாசீனப்படுத்தப்படுவதன் மூலம் தெளிவாகிறது.

எனவேதான் மக்கள் "கோத்தா கோ ஹோம்", "மைனா கோ ஹோம்" போன்ற போராட்டங்களில் இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டனர். மஹிந்த ராஜபக்ஷ தரப்பினரோ இப்போராட்டங்களை வன்முறைகள் மூலம் முறியடிக்க முயற்சி செய்தனர். ஆனால், அது பலனளிக்காதது மட்டுமின்றி மஹிந்த தனது பிரதமர் பதவியைத் துறக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

ஆனால் ரணில் விக்ரமசிங்கவோ, ஜனநாயகப் போராட்டங்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப் போவதில்லையெனக் கூறிக் கொண்டே போராட்டத்தைச் சிதைக்கும் சதி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறார். போராட்டக்காரர்களின் கோரிக்கை தொடர்பாக அவர்களுடன் பேச்சுகளை நடத்தி ஒரு குறைந்த பட்ச இணக்கப்பாட்டுக்கு வரக்கூடிய எந்த முயற்சிகளையும் எடுக்கவில்லை. அதன் காரணமாகப் போராடும் மக்கள் நீண்ட இழுபறி ஏற்படுத்தக்கூடிய சலிப்புக் காரணமாக போராட்டத்தை நீர்த்துப் போக வைக்கும் வகையில் ரணில் காய்களை நகர்த்துகிறார். இரண்டாவது எரிபொருள், சமையல் எரிவாயு போன்ற பொருட்களுக்கு மக்கள் நாட் கணக்கில் நீண்ட வரிசைகளில் நிற்க வேண்டிய நிலை உள்ளது. அதன் காரணமாக மக்கள் போராட்டங்களில் கலந்து கொள்வதற்கான நேரம் கிடைக்கப் போவதில்லை. அதனால் போராடுபவர்களின் தொகை குறைவடைந்து போராட்டம் தொய்வடையும் நிலை ஏற்படலாம்.

மூன்றாவது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு இடங்களில் எரிபொருள் விநியோகம் செய்யப்படுவதால் எல்லா இடங்களிலும் வல்லமை பெற்ற சிலரே மாறிமாறி வரிசையில் நின்று எரிபொருளை வாங்கிக் கறுப்புச் சந்தையில் விற்கின்றனர். அதன் காரணமாகப் பெரும்பான்மையான மக்கள் வரிசையில் நாட்கணக்காக நின்ற விட்டு ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டியுள்ளது.

நான்காவதாகப் போராட்டத்தில் முன்னணியில் நிற்பவர்கள் வெவ்வேறு இடங்களில் வைத்துக் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்படுகின்றனர்.

ஒட்டு மொத்தமாக தற்சமயம் மக்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள் எதையும் தீர்க்க எவ்வித முயற்சியும் எடுக்கப்படவில்லை. மக்களின் ஊதியமோ, வருவாயோ அதிகரிக்கப்படாத நிலையில் அவர்கள் மலைபோல் உயரும் விலைவாசியில் எப்படி வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியும் என்பதில் ஆட்சியாளர்களுக்கு எவ்வித கவலையுமில்லை.

02 ஆம் பக்க தொடர்ச்சி...

குறிப்பாகச் சொல்லப் போனால், போராட்டக்காரர்களின் முதல் கோஷமாக இருந்தது கோட்டாபய பதவி விலக வேண்டும் என்பது. தற்போதும் அதுவே அவர்களின் கோஷமாக இருக்கின்றது. இவ்வாறு இருக்க போராட்டங்கள் நடக்க அனுமதிக்குமாறு கேட்டுக் கொண்டது கோட்டாபயவின் பதவிக்கு ரணில் வைக்கும் மறைமுக செக் காக இருந்திருக்கலாம் என அரசியல் பரப்பில் கருத்துக்கள் நிலவுகின்றன.

இப்போதும், **ராஜபக்சவர்களின் பாதுகாவலரே ரணில் பன பலரும் தெரிவித்தாலும், அதனைப் பற்றி அக்கறையின்று கோட்டா கோ கம போராட்டக்காரர்களை நான் களைந்து செல்ல கூற மாட்டேன் என்றும், பொலிஸார் இடையூறு பிறப்பிக்க மாட்டார்கள் என்றும் பிரதமரானதும் தனது முதலாவது உத்தரவாக தெரிவித்து அமைதியான முறையில் தனது ஆட்டத்தை ஆரம்பித்துவிட்டார் ரணில்...**

எது எவ்வாறு இருப்பினும், பொருளாதார நெருக்கடிகள் இலங்கையை ஆக்கிரமிக்க தொடங்கிய போது ஆட்சிக் கவிழ்ப்பிற்கான நேரம் இது அல்ல எனவும், பொருளாதாரத்தை சீர் செய்யக் கூடிய வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்திருந்தார். அதேசமயம் பொருளாதார நெருக்கடிகள் உக்கிரமடைந்த காலப்பகுதியில் நடத்தப்பட்ட சர்வகட்சி மாநாட்டிலும் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது குறித்து கடுமையாக வலியுறுத்தியிருந்தார்.

அதன் பின்னர் நடைபெற்ற போராட்டங்கள் மற்றும் எதிரப்பு நடவடிக்கைகள், பேரணிகள் என்பவற்றை அமைதியாக அவதானித்து வந்த நிலையில், சந்தர்ப்பம் கிடைத்தால் பதவி ஏற்க தயார் என்ற அறிவிப்பையும் அவர் விடுத்திருந்தார். இடையில் பிரதமர் பதவியை ஏற்க பலரிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டு வந்தபோதும், சஜித் மற்றும் அநுர உள்ளிட்டோரின் பதில்கள் நிச்சயமற்ற நிலையிலும், விடுக்கப்பட்ட கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ள முடியாதது என தெரிவித்தும் இறுதி நேரத்தில் ரணிலிடம் பிரதமர் பதவி ஒப்படைக்கப்பட்டது. அது ரணிலுக்கு கிடைத்த எதிர்பாராத அதிர்ஷ்டமாக இருந்தாக சிலர் கருதுவதோடு, பதவிக்காக முன்னெடுக்கப்பட்ட காய் நகர்த்தல்களாக கூட இருக்கலாம் எனவும் தோன்றுகின்றது.

கோட்டபாய ராஜபக்ஸ குடும்ப ஆட்சியை இல்லாதொழிப்பது அவருடைய ராஜதந்திர நகர்வுகளில் ஒன்றாக உள்ளது. அவ்வாறு பார்க்கின்ற பொழுது படிப்படியாக 1வது விடயமாக ரணில் பிரதமராக இருந்த காலப்பகுதியில் காலிமுகத்திடலிலே இடம்பெற்ற போராட்டத்தை தொடர்ந்து அனுமதிக்க வேண்டும் என்ற விடயத்தை அப்பொழுது ஜனாதிபதியாக இருந்த கோட்டபாயராஜபக்ஸ அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

ஆனால் இன்று ஜனாதிபதி ஆகிய அடுத்த கணமே நாட்டின் அமைதியை பேணவும் சட்டம் ஒழுங்கை நிலை நாட்டுவதற்காகவும் இன்று இவ்வாறான போராட்டங்களை அடக்குகின்ற ஒடுக்குகின்ற நடவடிக்கைகளில் ஈடுப்பட்டு தற்பொழுது அந்த போராட்டங்களில் ஈடுப்பட்டவர்களை கைது செய்யும் நடவடிக்கைகளையே ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வருகின்றார்.

அத்துடன் கோட்டபாய ராஜபக்ஸ மஹிந்த ராஜபக்ஸ குடும்பத்தையே அடியோடு அந்த அரசியலில் இருந்து அகற்றுவதற்கான நகர்வான தனது கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்கு மீண்டும் மெருகூட்டி அதனை புதிப்பித்து தமது பக்கத்திற்கு அணைவரையும் சேர்த்து எடுக்கும் நடவடிக்கையும் தற்பொழுது இடம்பெறுகின்றது. அதிலே தான் சர்வ கட்சி அரசாங்கத்திற்குள் தனது சகாக்களை அமைச்சு பதவி கொடுத்து வரவேற்றுக்கு கொள்கின்ற ஒரு நிகழ்வு தற்பொழுது இடம்பெற இருக்கின்றது . அதனை தொடர்ந்து ராஜபக்ஸ குடும்பத்திலே முக்கியதுவம் வகிக்கின்ற ஒருவரையும் ஏனென்றால் கூடுதலாக பொதுஜன பெரமுனவினுடைய கட்சிக்கு கூடுதலாக சென்றவர்களை பார்க்கின்ற பொழுது ஐக்கிய தேசிய கட்சியிலேயே இருந்தவர்கள் தான் அந்த கட்சிக்கு கூடுதலாக சென்று இருக்கின்றார்கள்.

ஆகவே ஐக்கிய தேசிய கட்சியில் இருப்பர்களுக்கே பதவியை கொடுத்து விட்டு மீண்டும் ஐ.தே. கட்சிக்கு உயிரோட்டம் கொடுத்து அந்த ஐ.தே.கட்சியை பலப்படுத்தி விட்டு கோட்டா.பசில்.மஹிந்த ராஜபக்ஸ அவர்களை வெளியில் போடுகின்ற அடுத்த கட்டங்களினுடைய நகர்வுகளின் வியூகங்கள் இடம்பெற்றுக்கொண்டிருந்தாலும் இதனை விளங்காதவர்களாக இவர்கள் செயற்படுகின்றார்கள். அதே நேரத்திலேயே எவ்வாறு உள்ளே எடுத்து தமது தற்பாதுகாப்புக்காக பயன்படுத்திக்கொண்ட ரணிலை எப்படி மீண்டும் இக்கட்சியை விட்டு அனுப்புவது .பதவியில் இருந்து அனுப்புவதென்று மஹிந்த ராஜபக்சக்களின் குடும்பமும் ஏனையவர்களும் திட்டம் தீட்டினாலும் அதை விட மேலோங்கி இன்று ஆறு தடவைகள் பிரதமராகவும் பின்னர் தற்பொழுது ஜனாதிபதியாக இருந்து ஒரு சாதனையை படைத்தவராக ரணில் விக்கிரமசிங்க திகழ்கின்றார். எது எவ்வாறாக இருப்பினும் மஹிந்த ராஜபக்ஸக்களினுடைய குடும்பத்தை வீதியில் கொண்டு வந்து அவருடைய கட்சியை பலப்படுத்தி ஐக்கிய தேசிய கட்சி தேர்தலில் போட்டியிட்டு அபார வெற்றியை பெறுமளவிற்கு ஜனாதிபதி ரணில் அவர்களுடைய காய்நகர்த்தல்கள் ஒவ்வொன்றும் நகர்த்தப்படும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.





# பல்சுவை கதம்பம்



## முகத்தை அழகாக்கும் சில எளிய இயற்கை அழகு குறிப்புகள்...!!



தக்காளியை மிக்சியில் போட்டு அதனை ஜூஸாக்கி அதை முகத்தில் தேய்த்து சிறிது நேரம் கழித்து குளிர்ந்த நீரில் கடலைமாவு போட்டு கழுவினால் முக பளபளப்பு அடையும்.

நன்கு கனிந்து பழுத்த நிலையில் இருக்கும் வாழை பழத்தை கூழாக்கி அதை முகத்தில் தேய்த்து ,அரை மணி நேரம் கழித்து முகம் கழுவினால் முக பளபளப்பு கூடும்.

பாதாம் பருப்பை அரைத்து தேன், எலுமிச்சை சாறு கலந்து முகத்தில் தடவி சிறிது நேரம் கழித்து கழுவிவர முகம் பளப்பளப்பாகும். உருளைக்கிழங்கு சாறுடன் கடலைமாவையும் சேர்த்து முகத்தில் தேய்த்து வந்தாலும் முகம் பொலிவு பெறும்.

கஸ்தூரி மஞ்சள் தூளை பன்னீரில் கலந்து வெயிலில் வைத்து சூடாக்கி, அதை முகத்தில் தேய்த்து வந்தால் முகப்பருக்கள் மாயமாகிவிடும். செம்பருத்தி இலை, பயத்தம் பயறு இவற்றை சம அளவாக எடுத்து நீர்விட்டு அரைத்து முகத்தில் பூசிவந்தால் முகம் பளபளக்கும்.

அகத்திக் கீரையை தேங்காய் பால் விட்டு அரைத்து முகம் மற்றும் உடல் முழுவதும் பூசி ஊறவைத்து பின் குளித்து வந்தால் முகமும், உடலும் வசீகரமாகும்.

தேங்காய் எண்ணெய் வெதுவெதுப்பான சூடேற்றி, தலைக்கு தடவி நன்கு 20 நிமிடம் மசாஜ் செய்து, 30 நிமிடம் ஊறவைத்து குளித்தால், முடி வளர்ச்சி அதிகரிப்பதோடு, அடர்த்தியாகவும் வளரும்.

## திடீர் கோதுமை மா வடை

**தேவையான பொருட்கள் :**

**கோதுமை மா - 500 g**
**வெங்காயம் - 2**
**பச்சைமிளகாய் - 4**
**உப்பு - அளவானது**
**தண்ணீர் - அளவானது**
**எண்ணெய் - அளவானது**

**செய்முறை :**

**வெங்காயம் பச்சை மிளகாய் இரண்டையும் சிறிதாக அரிந்து மாவுடன் உப்பும் சேர்த்து கையால் பிசைந்து பின் சிறிது சிறிதாக நீர் விட்டு ரொட்டி சுடும் பதத்திற்கு குழைத்துக்கொள்ள வேண்டும். தாச்சிச் சட்டியில் எண்ணெய் விட்டுக் காய்ந்தவுடன், மாவை சிறிய உருண்டைகளாக உருட்டி சாடையாகத் தட்டி நடுவே துளை போட்டு. அடுப்பை அளவாக எரியவிட்டு வடையைப் போட்டு சிறிது நேரத்தில் அகப்பையால் பிரட்டி வேகவிட்டு பொன்னிறம் வந்ததும் எடுக்க வேண்டும். பச்சை மிளகாயையும், வெங்காயத்தையும் உங்கள் விருப்பத்துக்கு ஏற்றாற்போல் கூட்டிக் குறைக்கலாம்.**

**சுடச் சுட உண்ணவும் ஆறியஉண்ணவும் மிகவும் சுவையாக இருக்கும்.**

**வீட்டுக்கு விருந்தினர் வரும் போது, அவர்களுக்குக் கொடுக்க ஒன்றுமில்லாத போது, இந்த வடை வருபவர்களுக்கு வித்தியாசமான சிற்றுண்டியாக இருக்கும்.**



## சிவப்பு அரிசி சாப்பிடுவதால் இத்தனை நன்மைகள் உள்ளதா....!!

சிவப்பு அரிசியில் மாங்கனீஸ், மக்னீசியம், செலினியம், துத்தநாகம் போன்ற தாது உப்புக்கள் உள்ளது. தானிய வகைகளில் சிவப்பு அரிசியில் மட்டும்தான் விட்டமின் ஈ உள்ளது.



சிவப்பு அரிசியில் நார்ச் சத்தும் மாவுச் சத்தும் உள்ளதால் ரத்தத்தில் உள்ள கொழுப்பை கரைக்க உதவுகிறது. சிவப்பு அரிசி சாப்பிடுவதால் இதில் உள்ள தாது உப்புக்கள் கூந்தல், பற்கள், நகங்கள், தசைகள், எலும்புகள் நன்கு வளர்ச்சி அடையும். வாய்ப் புண்கள் குணமாகும்.

உடல் எடையை குறைக்கும் நபர்களுக்கு, சிகப்பு அரிசி பெரும் உதவி செய்கிறது. அதில் உள்ள நார்சத்து காரணமாக, உடலில் இருக்கும் அதிகப்படியான கொழுப்புகள் குறையும். இந்த அரிசி புற்றுநோய்க்கு எதிராகவும், புற்றுநோய் கிருமிகளுக்கு எதிராகவும் போராடும்.

சர்க்கரை நோயாளிகளுக்கு வெள்ளை அரிசியைவிட சிவப்பு அரிசி சாப்பிடுவது பல மடங்கு நல்லது. சிவப்பு அரிசி கொண்டு செய்யப்பட்ட சிவப்பரிசி கஞ்சி, சிவப்பரிசி இட்லி, புட்டு, இடியாப்பம் போன்றவற்றை குழந்தைகளுக்கு அடிக்கடி உண்ண கொடுப்பதால் அவர்களின் உடல் பலம் பெறும். நோய் எதிர்ப்பு சக்தி அவர்களின் உடலில் அதிகரிக்கும்.

காலை உணவாக இந்த அரிசியினால் செய்த பதார்த்தங்களை சாப்பிடுவதன் மூலம் அன்றைய பொழுது முழுவதும் நமது உடல் மிகுந்த உற்சாகமாக இருக்கும். சிகப்பு அரிசியில் புட்டு, கஞ்சி, களி போன்றவற்றை செய்து சாப்பிடலாம்.

## தலைமுடி அடர்த்தியாகவும் கருமையாவும் இருக்க உதவும் குறிப்புகள் !!

நெல்லிக்காய் பவுடரில் எலுமிச்சை சாற்றினை கலந்து தலையில் சிறிது நேரம் ஊற வைத்து பின்பு கழுவ வேண்டும். இப்படி சிறிது காலம் செய்து வந்தால் சிறந்த பலனை அடையாளம். எலுமிச்சை மற்றும் நெல்லிக்காய் அதிகளவு சாப்பிட பழகிக் கொள்ளுங்கள். இது முடிக்கு தேவையான ஆரோக்கியத்தை கொடுக்கும்.

வெங்காயம் தலைமுடி உதிர்வை தடுப்பதுடன் முடிக்கு தேவையான போஷாக்கினை வழங்கி முடியை கருமையாக்க உதவும். வெங்காய சாற்றினை தலையில் உற வைத்து பின்பு ஷாம்போ கொண்டு கழுவ வேண்டும். இது தலையில் உள்ள கிருமிகளை அழிப்பதுடன் போஷாக்கினையும் வழங்குகின்றது. இதனை தினமும் செய்தால் தான் சிறந்த பலனை பெற முடியும்.

இளநரை மற்றும் முடியை கருமையாக்க சிறந்த இயற்கை பொருள் கறிவேப்பில்லை ஆகும். கறிவேப்பிலையை உலர வைத்து பொடியாக்கி தலையில் ஊற வைத்து சிறிது நேரம் கழித்து கழுவ வேண்டும். இவ்வாறு தினமும் செய்தால் இளநரை பிரச்சனையில் இருந்து விடுபடலாம்.

வெந்தயத்தை அரைத்து தினமும் தலையில் நன்கு ஊற வைத்து கழுவி வந்தால் நாளடைவில் முடி கருமையாக மாறும். தேங்காய் எண்ணெய்யில் வெந்தயத்தை ஊற வைத்து தினமும் தலைக்கு தேய்த்து வாருங்கள் முடி கருமையாக மாறும்.



செம்பருத்தி பூ மற்றும் இலையை எடுத்து அரைத்து தலையில் நன்கு ஊற வைத்து பின்பு கழுவ வேண்டும். இப்படி வாரத்திற்கு மூன்று முறை தொடர்ந்து செய்து வந்தால் தலை முடியை கருமையாக மாற்றலாம்.

செம்பருத்தி தலைக்கு தேவையான போஷாக்கினை கொடுப்பதுடன் முடி உதிர்வில் இருந்தும் தடுக்கின்றது. தலைமுடியை கருமையாக மாற்ற இயற்கை வழிமுறைகளை பின்பற்றுவது தான் சிறந்தது. இது பக்கவிளைவுகளை ஏற்படுத்தாமல் நமது ஆரோக்கியத்தையும் பேண உதவுகிறது.





ஊடகத்தாருக்கு

**ஆபிரகாமரைத் தமிழரசுக் கட்சியில் இருந்து நீக்குக.**
**திரு மாவை அவர்களுக்கு வெளிப்படையான வேண்டுதல்.**

**மறவன்புலவு க. சச்சிதானந்தன்**

மெய்ப்பொருளார் அரசர்.
திருக்கோவலூர் அரசர்.
வேற்று நாட்டு அரசன் முத்தநாதன் அவருக்குப் பகைவன்.

முத்தநாதன் படையெடுத்து வந்தான்
மெய்ப்பொருளார் அவனைத் தோற்கடித்து விரட்டினார்.

அவமானம் தாங்காத முத்தநாதன் சிவ வேடம் கொண்டான். மெய்ப்பொருளார் அரண்மனைக்குள் புகுந்தான்.

திருநீறு பூசிய சிவ வேடத்தவர்கள் தடையின்றி நுழையலாம் அரண்மனைக்குள். முத்தநாதன் நேரே மெய்ப்பொருளாரிடம் சென்றான். மெய்ப்பொருளார் அவனை வணங்கினார்.

மறைத்து வைத்த வாளால் மெய்ப்பொருளாரை வெட்டிக் கொன்றான் முத்தநாதன். வஞ்சம் தீர்த்தான்.

நம் சமயத்தில் உள்ளான்.
அவன் பகைவன் ஆனாலும் அவனைப் பாராட்டுவோம் போற்றுவோம் உதவுவோம் என்பது சமயத் தோழமை.

கரோலிஸ் கத்தோலிக்கர்.
மனைவி அசின் கத்தோலிக்கர்.
மகன் இடல்லசர் கத்தோலிக்கர்.
கத்தோலிக்க பாடசாலையான தூய சர்வித்தார் கல்லூரியில் படித்தவர் இடல்லசார். பிறந்ததும் வளர்ந்ததும் பயின்றதும் வாழ்ந்து வருவதும் கத்தோலிக்கராகவே இடல்லசார்.

கிறித்தவர் ஒருவர் குடியரசுத் தலைவராக வேண்டும் என ஆபிரகாம் நினைத்ததில் தவறில்லை. யாக்கோபர் நினைத்தாரோ தெரியவில்லை.

சிவவேடதாரி என்பதால் எதிரி முத்தநாதனுக்கு வழிவிட்டு வழிபட்டவர் மெய்ப்பொருளார். சைவத் தோழமை அவருக்கு மேலாகத் தெரிந்தது.

சமயத்தால் ஒருமித்த இருவர் சமயத் தோழமையில் இணைவதில் பணிபுரிவதில் தம் சமய நிலையை மேம்படுத்துவதில் தவறு இல்லை

ஆனாலும் இடல்லசருக்காக ஆபிரகாம் எடுத்த முயற்சிகள் அரசியல் சாணக்கிய வரலாற்றின் கரும்புள்ளி.

ஆபிரகாமரோ தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்.

1961ஆம் ஆம் ஆண்டிலிருந்து 61 ஆண்டுகளாக இலங்கை தமிழரசுக் கட்சிக்காக உழைத்து வருகிறேன். வாழ்கின்ற மூத்த உறுப்பினர்களுள் பணியால் பங்களிப்பால் தகுதியான இடம் எனக்கு உண்டு.

தமிழரசுக் கட்சியின் தலைவர் அவர்களே. திரு ஆபிரகாம் அவர்களைத் தமிழரசுக் கட்சியின் அனைத்துப் பொறுப்புகளிலிருந்தும் விடுவிக்குமாறும் உறுப்புரிமையில் இருந்து நீக்குமாறும் அதற்குரிய கட்சி நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கு முன்பும் அவரைக் கட்சியிலிருந்து விலக்குமாறு இரண்டு முறை எழுதியுள்ளேன். மூன்றாவது முறையாக எழுதுகிறேன்.

எந்தவிதப் பதவி எதிர்பார்ப்பும் பொறுப்பு எதிர்பார்ப்பும் இல்லாமல் ஈழத்தமிழ் மக்களுக்காக கடந்த 61 ஆண்டுகளாகத் தமிழரசுக் கட்சி வழியாக நான் செய்து வருகின்ற பணிகள். ஆபிரகாம் செய்தது போன்றனவல்ல. தமிழுக்கோ தமிழருக்கோ தமிழ் அரசுக் கட்சிக்கோ தீங்கிழைத்தவனல்லன்.

என் வேண்டுகோளை ஏற்று ஆபிரகாமைக் கட்சியிலிருந்து முற்றாக நீக்குவீர்களாக.

# யார் இந்த ஜோசப் ஸ்டாலின்?



ஜோஸப் ஸ்டாலின் கொழும்பு. மோதரை. துறைமுக தொழிலாளர் தலைவரும் இலங்கை கம்யூனிஷ்ட் கட்சி அல்லது சீன அணியின் தலைவரான தோழர் பெனடிக் அவர்களின் மகனாவார்.

மோதரை டிலாஸால் வித்தியாலயத்தில் கல்வி பயின்று. ஹாபிட்டிகம கல்விக் கல்லூரியில் ஆரம்பப் பிரிவுக்கான ஆசிரியராக பயிற்றப்பட்டு, முதல் நியமனம் பெற்ற தோழர் ஜோஸப் அனுராதபுர மாவட்டத்தின் தந்திரிமலை வன்னிஹெலம்பேவ படசாலையில் மிக நீண்டகாலமாக பணியாற்றினார். அந்த காலகட்டமானது யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலகட்டம் என்பதால் தந்திரிமலை பிரதேசமானது போக்குவரத்து வசதிகளின்றிய பின்தங்கிய காலமாகும்.

நீண்டகாலமாக சேவையாற்றிய பின் அங்கிருந்து கொழும்புக்கு மாற்றம் பெறாது. கண்டி தெல்தெனிய பிரதேசத்திலுள்ள மற்றுமொரு கஷ்டப் பிரதேசத்திற்காகும். பின் அங்கிருந்து கொழும்பிற்கு மாற்றலாகி வந்த அவர் புளுமெண்டல் பிரதேசத்தில் வாழும் வீதிச் சிறார்கள் செறிவாக வாழும் பாடசாலையொன்றில் கற்பித்துக் கொண்டிருந்த போது பத்திரிகைக்கு கட்டுரை ஒன்றை எழுதிக்கொள்ள அந்தப் பாடசாலைக்குச் சென்றேன்.

ஜோசா வன்னிப் பகுதியில் இருந்த காலத்தில் அதற்கு கொஞ்சம் இந்தப் பக்கம் புளியங்குளம் அலையாப்பற்று மகா வித்தியாலயத்தில் பணிபுரிந்தேன். ஜோஸா பாடசாலையில் மிக நன்றாகக் கற்பிக்கின்ற, அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற, அதிகமான வெளிக்கள வேலைகள் செய்கின்ற ஆசிரியர். பின்னர் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தேவை நிமித்தம் முழுநேர தொழிற்சங்க செயற்பாட்டுக்கு வந்தவர்.

ஜோஸப் தொழிற்சங்கத் தலைவர் என்ற வகையில் கடந்த காலங்களில் ஆசிரிய சங்கத் தலைவர்கள் பின்பற்றிய கொள்கையொன்றை மிகவும் தீவிரமாக பின்பற்றியவர். அதுதான் ஆசிரியர் சங்கத் தலைவர்கள் அதிபர் பதவி போன்ற வேறு பதவி உயர்வுகளை வேறு தரப்படுத்தல்களை பெற்றுக் கொள்ளாமை. 1980 களில் வேலை நிறுத்தப் போராட்டங்களில் ஈடுபட்டு அநீதிக்குட்பட்ட ஆசிரியர் சங்கத் தலைவர்கள் 2005 காலப்பகுதியில் ஆசிரியர் சங்கங்களென்ற வகையில் ஆஜராகி, அரசியல் பழிவாங்கல் தொடர்பில் நடவடிக்கை எடுத்து சலுகை பெற்றுக் கொண்டமையை ஜோஸப் மிக வன்மையாகக் கண்டித்தார். அதுமட்டுமல்ல இலங்கை ஆசிரியர் சங்கத்தின் மத்திய குழுவின் நியமனப் பிரேரனைகளுக்குப் புறம்பாக போட்டியிட்டார். அந்த வாக்கெடுப்பில் தோல்வியுமுற்றார்.


தோழர் பேர்டி வீரக்கோனின் சகோதரர் வெற்றியீட்டி தலைவர் பதவிக்குத் தெரிவானார். அவர் பிற்காலத்தில் கல்விப் பணிப்பாளராக ஓய்வுபெற்றார். எவ்வாறாயினும் பின்பு ஜோஸப் இந்தக் கொள்கையை மாற்றியமைத்தார். அவருடன் இருந்தவர்கள் எல்லோருமே பதவி உயர்வு பெற்றுக் கொண்டார்கள். ஆனால் ஜோஸா என்றுமே ஆசிரியராக இருந்தாரே தவிர ஒருபோது பதவி உயர்விற்கு முயற்சிக்கவில்லை.

அவர் இப்போது வாரத்தில் ஏழு நாட்களும் ஆசிரியர் சங்க அலுவலகத்தில் அல்லது அதுசார் பொது வேலைகளில் ஈடுபட்டு வருகிறார். முழு நேர தொழிற்சங்க வாதியாக மாறிய பின் ஒருபோதும் தனிப்பட்ட தேவைகள் நிமித்தம் தனது நேரத்தை ஒதுக்கிக்கொள்ளாதவர். ஜோஸாவிற்கு ஆசிரியர் தொழிற்சங்கம் தவிர்ந்த தனிப்பட்ட வாழ்க்கையின் தேவைகள் அதிகம் இருக்கலாம். அவர் திருமணமாகாதவர். நகர்புற வாசிகளான அவரது குடும்ப உறுப்பினர்கள் பொது வாழ்க்கையில் ஈடுபடுவோர். அவர்கள் ஏனையோரைப் போன்றே தொழில் செய்தவாறு சுயாதீனமாக வாழ்வோர். காணி, வீடு, வாகன வசதிகளைப் பெற்றுக் கொண்டு வாழ்வில் முன்னேறி சமூக அந்தஸ்தை உயர்த்திக் கொள்ள முயற்சிக்காதவர். எனக்குத் தெரிந்தவரை அனுராதபுர பகுதியில் இருக்கும்போது யாரோ கொடுத்த மோசமான நிலையில் இருந்த ஒரு சைக்கிளைத் தவிர வேறொன்றும் இருக்கவில்லை. தனக்குக் கிடைக்கும் ஊதியத்தில் மட்டுமே வாழ்க்கையை ஓட்டும் தொழிலாளர் வர்க்கத்தைச் சார்ந்தவர். அது ஜோஸாவின் தேர்வு.

**குறிப்பு:**
**அஜீத் பெரகும்**
**(தமிழில் மார்க்ஸ் பிரபா)**

# QR குறியீட்டை பாதுகாப்பாக வைக்குமாறு எரிசக்தி அமைச்சர் கோரிக்கை

தேசிய எரிபொருள் பத்திரத்தைப் பயன்படுத்துபவர்கள் QR குறியீட்டை மற்றவர்களுக்குத் தெரியும் இடத்தில் காட்சிப்படுத்த வேண்டாம் என எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜயசேகர கேட்டுக்கொண்டுள்ளார். டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு அமைச்சர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். மேலும், வேறு யாரும் சட்டவிரோதமாக QR குறியீட்டை பயன்படுத்தாமல் இருப்பதை உறுதிசெய்யும் முகமாக பாதுகாப்பான இடத்தில் வைக்கவும் எனவும் குறித்த பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.




இதேவேளை, எரிபொருள்பெறுவதற்காகபோலியான QR குறியீடுகளை பயன்படுத்துவோருக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

போலியான QR குறியீடுகளை பயன்படுத்தி எரிபொருளை பெற சிலர் முயற்சித்த சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அத்தகைய QR குறியீடுகளை அடையாளம் காண தகவல் தொழில்நுட்ப முகாமையுடன் இணைந்து விசேட வேலைத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சு குறிப்பிட்டுள்ளது



# விளையாட்டு செய்திகள்

## இந்திய அணியின் உப தலைவர் ஹர்திக் பாண்டியா?




இந்திய அணியின் நட்சத்திர ஆல்-ரவுண்டர் ஹர்திக் பாண்டியா உலகக் கிண்ணத்துக்கான இந்திய அணியின் உப தலைவராக நியமிக்கப்படலாம் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்திய அணி உலகக் கிண்ணத்துக்கு முன்னதாக ஆசிய கிண்ண 2022 போட்டிகளில் விளையாட உள்ளது. இந்நிலையில், 20 ஓவர் உலகக் கிண்ண தொடருக்கான இந்திய அணியின் உப தலைவரக ஹர்திக் பாண்டியா நியமிக்கப்படலாம் என பிசிசிஐ வட்டாரங்களில் பேசி வருவதாகக் கூறப்படுவது முக்கியத்துவம் வாய்ந்ததாக பார்க்கப்படுகிறது.

கே.எல். ராகுலிடம் இருந்து இந்த உப தலைவர் பொறுப்பு பாண்டியாவுக்கு வழங்கப்படலாம் எனப் பேசப்பட்டு வருகிறது. இந்திய அணி தற்போது மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டி20 தொடரில் விளையாடி வருகிறது. இந்தத் தொடரில் கே.எல்.ராகுல் பெயரும் இடம் பெற்றிருந்தது. இருப்பினும், அவருக்கு கொரோனா தொற்று உறுதியானதால் இந்தத் தொடரில் அவர் விளையாடவில்லை.

டி20 உலகக் கிண்ணத்தை தொடருக்கான இந்திய அணியின் உப தலைவராக யாரை நியமிக்கலாம் என்ற தேடலில் ஹர்திக் பாண்டியாவின் பெயரே அதிகம் இடம் பெற்றதாக தெரிகிறது. இந்த ஆண்டு ஐபிஎல் போட்டியில் குஜராத் டைட்டன்ஸ் அணியின் தலைவராக நியமிக்கப்பட்ட அவர் அந்த அணியை சிறப்பாக வழிநடத்தி அறிமுகமான முதல் ஐபிஎல் சீசனிலேயே சாம்பியன் பட்டம் பெற்றுத் தந்தார். தலைவராக மட்டுமில்லாமல் ஒரு சிறந்த ஆல்ரவுண்டராக அவர் ஐபிஎல் போட்டிகளில் வலம் வந்தார்.

அண்மையில் நடந்து முடிந்த இங்கிலாந்து மற்றும் தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு எதிரான தொடரில் சிறப்பான ஆட்டத்தினை அவர் வெளிப்படுத்தினார்.

இந்திய அணியின் முன்னாள் தலைவர் விராட் கோலி தனது தலைவர் பதவியிலிருந்து விலகிய பிறகு ரோகித் சர்மா அணியின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார். ஒரு நாள் மற்றும் டி20 போட்டிகளில் கே.எல்.ராகுல் துணைக் தலைவராக நியமிக்கப்பட்டார். கே.எல்.ராகுல் தனது வெள்ளைப் பந்து போட்டியினை இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் விளையாடி இருந்தார். அதன்பின் பெரிய அளவில் வெள்ளைப் பந்து போட்டிகளில் அவர் விளையாடவில்லை.

இந்நிலையில், உலகக் கிண்ணத்தில் புதிய உப தலைவராக ஹர்திக் பாண்டியா நியமிக்கப்படலாம் எனப் பேசப்பட்டு வருகிறது. இதனால் ரசிகர்கள் மத்தியில் இவர்கள் இருவரில் யார் உலகக் கிண்ண டி20 தொடருக்கான புதிய உப தலைவராக நியமிக்கப்படுவார்கள் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

## 2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டி : இலங்கைக்கு 4 பதக்கங்கள்

2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில், இதுவரையில் முடிவடைந்த போட்டிகளின் அடிப்படையில், பதக்கப் பட்டியலில் அவுஸ்ரேலியா தொடர்ந்தும் முதல் இடத்தில் உள்ளது. இங்கிலாந்தின் பேர்மிங்ஹாமில் நடைபெறும் இப்போட்டியில் 50 தங்கம், 44 வெள்ளி, 46 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக 140 பதக்கங்களை அவுஸ்ரேலியா பெற்றுள்ளது.

47 தங்கம், 46 வெள்ளி, 38 வெண்கலப் பதக்கங்கள் அடங்கலாக 131 பதக்கங்களுடன் இங்கிலாந்து இரண்டாவது இடத்தை பிடித்துள்ளது. கனடா 19 தங்கம் 24 வெள்ளி 24 வெண்கலப் பதக்கங்களுடன் மூன்றாம் இடத்திலும் நியூசிலாந்து, 17 தங்கம், 11 வெள்ளி, 13 வெண்கலப் பதக்கங்களுடன் 4 ஆவது இடத்திலும் உள்ளது. 9 தங்கம் 8 வெள்ளி 9 வெங்கலத்துடன் 26 பதக்கங்களுடன் இந்தியா 5 ஆவது இடத்தில உள்ள அதேவேளை ஒரு வெள்ளி 3 வெண்கல புத்தகங்களுடன் இலங்கை 26 ஆவது இடத்தில உள்ளது.

## பொதுநலவாய விளையாட்டு விழாவில் பதக்கம் வென்ற யுபுன் அபேகோன்




இலங்கையின் யுபுன் அபேகோன் ஆசியாவின் அதிகவே மனிதராக பதிவாகியுள்ளார். பர்மிங்காம் பொதுநலவாய விளையாட்டு விழாவில் பதக்கம் வென்றதன் மூலம் அவருக்கு இந்த சிறப்பு கிடைத்துள்ளது. பொதுநலவாய விளையாட்டு விழாவில் ஆடவருக்கான 100 மீட்டர் இறுதிப் போட்டி இலங்கை நேரப்படி அன்று(04) அதிகாலை 2 மணியளவில் நடைபெற்றது.

இந்த போட்டிக்கு தகுதிபெற்ற ஒரே ஆசிய வீரராக யுபுன் அபேகோன் களமிறங்கினார். போட்டியை 10.14 விநாடிகளில் பூர்த்தி செய்த அவர் மூன்றாமிடத்தைப் பிடித்து வெண்கலப்பதக்கத்தை தன்வசப்படுத்தினார். இது பொதுநலவாய விளையாட்டு விழா வரலாற்றில் மெய்வல்லுநர் போட்டிகளில் 24 வருடங்களுக்கு பின்னர் இலங்கை வென்ற முதல் பதக்கமாகும்.

போட்டியை 10.02 விநாடிகளில் கடந்த கென்யாவின் பர்டினன்ட் ஓமன்யாலா தங்கப்பதக்கத்தை சுவீகரிக்க தென் ஆபிரிக்காவின் அகானி சிம்பினி (10.13 விநாடிகள்) வெள்ளிப்பதக்கத்தை வென்றார். பொதுநலவாய விளையாட்டு விழாவில் இறுதிப் போட்டிக்கு தகுதிபெற வேண்டும் என்பது எமது இவ்வருட இலக்குகளில் ஒன்றாகும். இறுதிப் போட்டியில் ஓடுவதற்கு முன்பே எனது காலப்பெறுதியை அடைந்திருந்தேன்.

ஆகவே, போட்டியில் நான் அழுத்தமின்றி பங்குபற்றினேன். சிறந்த காலப்பெறுதியை அடைந்திருப்பதால் தைரியமாக ஓடும்படி எனது பயிற்றுநர் எனக்கு கூறினார். போட்டியில் வெண்கலப்பதக்கம் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

எ னக்கு ஆதரவளித்த அனைவருக்கும் நன்றி என்று போட்டியின் பின்னர் யுபுன் அபேகோன் தெரிவித்தார். இதேவேளை, பர்மிங்ஹாம் மைதானத்தில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகளுக்கான பரா பரிதி வட்டம் எறிதலில் பாலித பண்டார வெள்ளிப்பதக்கம் வென்றார். எவ் 42 - 44 பிரிவில் பரா பரிதி வட்டம் எறிதலில் பங்கேற்ற அவர் 44.02 மீட்டர் தூரத்திற்கு ஆற்றலை வெளிப்படுத்தி வெள்ளிப்பதக்கத்திற்கு பாத்திரமானார். பொதுநலவாய பரா விளையாட்டு விழாவில் இலங்கையர் ஒருவர் வென்ற முதல் பதக்கம் இதுவாகும்.



# உலக பார்வை



## பாலஸ்தீனிய போராளி குழுக்கள் மீது இஸ்ரேல் தாக்குதல்

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனிய போராளி குழுக்களுக்கு இடையே பதற்றங்கள் அதிகரித்து வரும் நிலையில், காஸாவில் இஸ்லாமிய ஜிஹாத் இலக்குகள் மீது இஸ்ரேலிய இராணுவம் தாக்குதல் நடத்தியுள்ளது.

அன்று (வெள்ளிக்கிழமை) நடத்தப்பட்ட இந்த கொடிய தாக்குதலில், 5 வயது சிறுமி மற்றும் 23 வயது பெண் உட்பட குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டதாக பாலஸ்தீன சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. மேலும் 75 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் தீவிரவாதிகள் என்று இஸ்ரேல் தெரிவிக்கின்றது.

மேலும், இஸ்லாமிய ஜிஹாத் அதன் மூத்த தலைவர்களில் ஒருவரான தைசீர் அல் ஜபாரி இஸ்ரேலிய தாக்குதலில் கொல்லப்பட்டதாக ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் இஸ்லாமிய ஜிஹாத்தின் ஆயுதப் பிரிவான குத்ஸ் படைப்பிரிவின் தளபதியாகவும், அதன் இராணுவ சபையின் உறுப்பினராகவும் இருந்தார்.

இந்த வார தொடக்கத்தில் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் மற்றொரு மூத்த போராளி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து உடனடி அச்சுறுத்தலுக்கு பதிலளிக்கும் விதமாக இஸ்லாமிய ஜிஹாத் போராளிக் குழுவை குறிவைப்பதாக இஸ்ரேல் விளக்கம் அளித்துள்ளது.

பாலஸ்தீனிய போராளிகள் பல மணிநேரங்களுக்குப் பிறகு ரொக்கெட்டுகளை சரமாரியாகத் தாக்கினர். மத்திய மற்றும் தெற்கு இஸ்ரேலில் வான்வழித் தாக்குதல் சைரன்கள் ஒலித்தன. இஸ்லாமிய ஜிஹாத் 100 ரொக்கெட்டுகளை ஏவியது.

இஸ்ரேல் மற்றும் காசாவின் போர்க்குணமிக்க ஹமாஸ் ஆட்சியாளர்கள் கடந்த 15 ஆண்டுகளில் நான்கு போர்கள் மற்றும் பல சிறிய போர்களில் ஈடுபட்டுள்ளனர்.

## தொழிலாளர்களின் ஊதியத்திற்காக கூடுதலாக 140 மில்லியன் பவுண்டுகள் ஒதுக்கீடு!

தொழிலாளர்களின் ஊதியத்திற்காக கூடுதலாக 140 மில்லியன் பவுண்டுகளை உள்ளூர் சபைகளுக்கு வழங்க ஸ்கொட்லாந்து அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

துணைப் முதலமைச்சர் ஜோன் ஸ்வின்னி, உள்ளூர் அதிகார சபையான கோஸ்லாவுடன் நடத்திய பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து இந்த கூடுதல் நிதியுதவியை அறிவித்தார்.

பாடசாலைகள், ஆரம்ப பாடசாலைகள், கழிவுகள் மற்றும் மறுசுழற்சி மையங்களில் உள்ள ஊழியர்கள் 2 சதவீத ஊதிய சலுகையை நிராகரித்த பின்னர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட போவதாக அறிவித்தனர்.

இந்தநிலையில், யுனைட், யூனிசன் மற்றும் ஜிஎம்பி தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களின் தொழில்துறை நடவடிக்கையின் வாய்ப்பு குறித்து விவாதிக்க கோஸ்லாவின் தலைவர்கள் அன்று (வெள்ளிக்கிழமை) சந்தித்தனர்.

இதன்போது சபைத் தலைவர்கள், தங்களுக்கு கூடுதல் தகவல்கள் தேவை என்று முடிவு செய்து, அடுத்த வாரம் மீண்டும் கூடுவதாக தெரிவித்தனர்.

## உலகின் மிகப்பெரிய கலை விழா எடின்பரோவில் ஆரம்பம்!

உலகின் மிகப்பெரிய கலை விழாவின் தொடக்கத்திற்காக உலகம் முழுவதிலுமிருந்து ஆயிரக்கணக்கான கலைஞர்கள் எடின்பரோவில் ஒன்றுகூடியுள்ளனர்.

எடின்பர்க் திருவிழா பிரின்ஞ்' அதன் 75வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் 58 நாடுகளில் இருந்து 3,000க்கும் மேற்பட்ட நிகழ்ச்சிகளை நடத்துகின்றது.

அதன் வரிசையில் நகைச்சுவை நடிகர்களான பிரான்கி பாயில், ஸ்டீவர்ட் லீ மற்றும் அல் முர்ரே ஆகியோரின் நிகழ்வுகளும் அடங்கும்.

எடின்பர்க் மிலிட்டரி டாட்டு திரும்புகிறது. அதே நேரத்தில் எடின்பர்க் சர்வதேச விழாவில் நேரடியாக பார்வையாளர்கள் உட்புற இடங்களுக்குத் திரும்புவதைக் காணலாம்.

எடின்பர்க் சர்வதேச விழா பின்னர் முர்ரேஃபீல்ட் ஸ்டேடியத்தில் கிராவிட்டி அண்ட் அதர் மித்ஸ் என்ற இயற்பியல் நாடக நிறுவனத்தால் மேக்ரோ என்ற இலவச காலா நிகழ்வோடு ஆரம்பமாகின்றது.


மேக்ரோவில், ஸ்கொட்லாந்தின் தேசிய இளைஞர் பாடகர் குழுவுடன் 30 பேர் கொண்ட குழு ஒன்று சேர்ந்துள்ளது. இசை, ப்ரொஜெக்ஷன்கள், டிரம்ஸ், பிரமாண்டமான ஒளி காட்சி மற்றும் அக்ரோபாட்டிக்ஸ் மற்றும் நடனம் ஆகியவை இருக்கும்.

பிளேஹவுஸில் இறுதி வார இறுதியில் பிலடெல்பியா ஆர்கெஸ்ட்ராவின் இலவச இறுதிக் கலாட்டா சர்வதேச விழாவை நிறைவு செய்யும்.

## குரங்கு அம்மை – அவசர நிலை பிரகடனம்!

அமெரிக்காவில் குரங்கு அம்மை அவசர நிலை தேசிய அளவில் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், அந்த நோய்க்கு எதிரான தடுப்பூசிகளை வாங்குவதற்காக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு வழிவகை ஏற்பட்டுள்ளது. இது குறித்து அமெரிக்க சுகாதாரத் துறை தலைவர் ஜேவியர் பெக்கேரா கூறுகையில், 'குரங்கு அம்மை பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அடுத்தகட்டத்துக்கு எடுத்துச் செல்வதற்காக தேசிய அளவில் அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்புக்குப் பிறகாவது எந்தவொரு அமெரிக்கரும் குரங்கு அம்மை நோயை அலட்சியப்படுத்தக்கூடாது என்றார் அவர். அமெரிக்காவில் இதுவரை 7,100 க்கும் மேற்பட்டவர்களுக்கு குரங்கு அம்மை உறுதி செய்யப்பட்டுள்ள நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.




## உக்ரைன் துறைமுகத்திலிருந்து வெளியேறிய இரண்டாவது தானிய கப்பல்

உக்ரைன் துறைமுகத்திலிருந்து 58,041 மெட்ரிக் தொன் சோளம் அடங்கிய மூன்று கப்பல்கள் வெளியேற அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த கப்பல்கள் மூலம் 12,000 மெட்ரிக் தொன் சோளம் துருக்கிக்கும், 13,041 மெட்ரிக் தொன் சோளம் பிரித்தானியாவிற்கும் 33,000 மெட்ரிக் தொன் சோளம் அயர்லாந்திற்கும் கொண்டு செல்லப்படுகின்றன. துருக்கி மற்றும் ஐக்கிய நாடுகளின் ஒப்பந்தத்தின் கீழ் தானியங்கள் அடங்கிய முதலாவது உக்ரைன் கப்பல் கடந்த திங்கட்கிழமை லெபனான் நோக்கி பயணத்தை ஆரம்பித்தது.



## கையில் சிம் இல்லாத போன்! மகனை நம்பி வந்த 80 வயது மூதாட்டி

கர்நாடகாவில் தனது அம்மாவை சிம் இல்லாத போனை கையில் கொடுத்து கோவில் ஒன்றில் விட்டுவிட்டு தப்பிச் சென்ற மகனை அதிகாரிகள் தேடி வருகின்றனர். கர்நாடக மாநிலத்தின் கொப்பல் மாவட்டத்தில் உள்ள ஹுலிகி கிராமத்தில் அமைந்துள்ளது ஹுலிகெம்மா கோவில். இந்த கோவிலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னர் தனது அம்மாவை அழைத்துவந்த மகன் அங்கேயே விட்டுவிட்டு சென்றிருக்கிறார்.

மேலும், தனது தாயிடம் சாதாரண ஒரு போனை கையில் கொடுத்துவிட்டு, தன்னுடைய போன் நம்பர் இது என ஒரு காகிதத்தாளையும் கொடுத்துவிட்டு போயுள்ளார். மகன் போன் செய்வார் என்ற நம்பிக்கையில் மூதாட்டியும் கோவிலில் அமர்ந்திருந்த நிலையில், பக்தர்கள் கண்டு அவருக்கு சாப்பாடு மற்றும் போர்வை இவற்றினைக் கொடுத்து விசாரித்துள்ளனர்.

விசாரித்த போது மூதாட்டி நடந்ததைக் கூறியுள்ளார். குறித்த போனை பக்தர்கள் வாங்கி பார்த்த போது அதில் சிம் இல்லாததும், அவர் கையில் வைத்திருந்த பேப்பரில் போன் நம்பர் எதுவும் எழுதாமல் வெறும் பேப்பராக இருந்துள்ளதைக் கண்டு அதிர்ச்சி அடைந்து காவல்துறைக்கு தகவல் கொடுத்துள்ளனர். தற்போது மூதாட்டியை முதியோர் இல்லத்திற்கு அழைத்துச் சென்றுள்ள நிலையில், அவரிடம் விசாரிக்கவும் செய்துள்ளனர். குறித்த மூதாட்டி தனது பெயர் காசிம் என்றும் உஜ்ஜயனி கிராமத்தைச் சேர்ந்தவர் என்று மட்டுமே கூறியுள்ளார். இதனை தெரிந்து கொண்ட பொலிசார் குறித்த மூதாட்டியின் மகனை வலைவீசி தேடி வருகின்றனர்.

# வல்வைப் படுகொலைகள் – முப்பத்துமூன்று ஆண்டுகள்!

1968ம் ஆண்டு வியட்நாம் போரின் போது தெற்கு வியட்நாமில் மை-லாய் என்ற கிராமத்தை சுற்றிவளைத்த அமெரிக்கப் படைகள் அங்கிருந்த பொதுமக்களில் 400 பேர் வரையிலானோரைக் கொடூரமாகக் கொலை செய்தனர். இச்சம்பவமே மை-லாய் படுகொலைகள் என வரலாற்றில் வர்ணிக்கப்படுகின்றது. 1989ம் ஆண்டு இந்தியப்படைகள் வல்வெட்டித்துறையில் இதேபோன்றதொரு படுகொலையை நடாத்தியிருந்தது. இச்சம்பவத்தை வடஇந்தியத் தலைவர்களில் ஒருவரான ஜார்ஜ் பெர்ணாண்டஸ் என்பவர் "இந்தியாவின் மை-லாய் படுகொலை" என வர்ணித்து, அவற்றை தமிழ், ஆங்கிலம் மற்றும் இந்தி மொழிகளில் புத்தகமாக வெளியிட்டிருந்தார். இந்நூலானது இந்தியாவின் கோரமுகத்தை உலகத்திற்கு வெளிச்சம் போட்டுக்காட்டியிருந்தது.




வல்வெட்டித்துறையை சூழ ஊரிக்காடு, பொலிகண்டி பகுதியில் முகாம் அமைத்திருந்த இந்திய இராணுவத்தினர் 02.08.1989அன்று வல்வெட்டித்துறை பகுதிக்குள் யாரும் உட்பிரவேசிக்கவோ, வெளி யேறவோ முடியாமல் சுற்றிவளைத்து இரு நாட்களுக்கு (04.08.1989) வரை ஊரடங்கை அறிவித்துவிட்டு தமது இராணுவ நடவடிக்கையைத் தொடங்கினார்கள்.

இதன் போது வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 63 தமிழர்கள் சுட்டும், வெட்டியும், எரித்தும் கொடூரமாக கொலை செய்யப்பட்டார்கள். 100க்கும் அதிகமான தமிழர்கள் காயமடைந்திருந்தனர். காயமடைந்தவர்களுக்கு சிகிச்சையளிக்கவோ, அவர்களை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கோ இந்திய இராணுவம் அனுமதிக்கவில்லை. பெண்கள் பலர் பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்ட பின் கொல்லப்பட்டனர்.

120 வீடுகள், 45 கடைகள், 62 வாகனங்கள், 12 மீன்பிடிப்படகுகள், 176 வலைத் தொகுதிகள் உள்ளிட்ட தமிழர்களின் பல சொத்துக்கள் இந்திய இராணுவத்தினரால் முற்றாக அழிக்கப்பட்டன. அத்துடன் மக்களின் வீடுகளில் இருந்த தங்கநகைகள், பணம் மற்றும் இலத்திரனியல் பொருட்கள் என்பன இந்திய இராணுவத்தினரால் கொள்ளையடிக்கப்பட்டன.

வல்வை சனசமூக நிலையமும் தீ வைத்து எரித்து அழிக்கப்பட்டது.

இந்தியப்படைகள் தங்கள் முகாம்களுக்குத் திரும்பிச் சென்ற பின்னரே காயமடைந்தவர்கள் வைத்தியசாலைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டார்கள். அதன்பின்னரே இச்சம்பவங்கள் பற்றி வெளியே தெரியவந்தது. ஆனாலும் மக்கள் கொல்லப்பட்ட இச்சம்பவம் பற்றி எந்தவொரு இந்திய ஊடகமும் செய்தி வெளியிடவில்லை. மாறாக "புலிகளுக்கும் இந்திய இராணுவத்திற்குமிடையிலான மோதலில் 24 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். புலிகளின் தாக்குதலில் வீடுகள் கடைகள் சேதமடைந்தன. இத்தாக்குதலில் 06 புலிகள் கொல்லப்பட்டனர்" எனவே இச்சம்பவத்தை மறைக்கும் முகமாகச் செய்தி வெளியிட்டிருந்தன. லண்டனில் இருந்து வெளியாகும் Financial Times, The sunday telegraph, Indian Express போன்ற பத்திரிகைகள் இச்செய்திகளை பிரசுரித்த பின்னரே இச்சம்பவங்கள் வெளியுலகிற்குத் தெரியவந்தது. financial timesஇன் டெல்லி நிருபர் நேரடியாகவே இச்சம்பவங்களை பார்வையிட்டு அவற்றை பத்திரிகையில் வெளியிட்டிருந்தார்.இப்படுகொலையில் கொல்லப்பட்டவர்களின் நினைவாக தீருவிலில் தாமரை வடிவிலான நினைவுத்தூபி அமைக்கப்பட்டிருந்தது. அத்தூபியானது 2010இல் சிறிலங்கா இராணுவத்தினரால் இடித்துஅழிக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவினர்களுக்கு அவர்களை நினைவேந்துவதற்கான அடிப்படை உரிமை இலங்கை - இந்திய அரசுகளால் மறுக்கப்பட்டது.

# ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அமைச்சரவை



இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 07.08.2022 அன்று வெளியிடப்பட்டது.